அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

- page - 209 -

மலர் 4 இதழ் 5 விலை அ.4	நந்தன ஞு ஆவணி மீ ஆகஸ்டு—செப்டம்பர்—1952	வருட சந்தா ரூ. 2-4-0

ACC. NO. 18581



தக்கன் தன் மகளை பரமசிவனுக்கு
பாணிக் கிரகணம் செய்து வைத்தல்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—39)

பொருளடக்கம்

210

			பக்கம்
1.	திருப்புகழ் அநுபவம்	(திருப்புகழ்மணி) ...	193
2.	நடராஜ தத்துவம்	(தென்னுப்பிரிகா ச. மு. பிள்ளை) ...	197
3.	பழனித் தேவர்	(ரசபதி) ...	200
4.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(வி. எஸ். வேங்கடராமன்) ...	211
5.	அதிசயம் அநேகமுற்ற பழனி	(சே. த. இராமலிங்கம் பிள்ளை) ...	217
6.	ஒரு கவி	(வி. ஆர். ஜி.) ...	222
7.	பக்தியும் இசையும்	(கீழ்வேளூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை) ...	225
8.	ஆத்ம போதம்	(கா. பிச்சு மணி, கி. சுப்ரமணியன்) ...	230
9.	சேக்கிழார் செய்தது	(இளவழகனார்) ...	234
10.	வடபழனி ஆண்டவர் வெண்பா	(துரைசாமிப் பிள்ளை) ...	238
11.	Breathe and Build.	(Thiruppugal Mani) ...	239

கர வருட பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணா 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா இலங்கை உள்பட உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0 4 வருட சந்தா ரூ. 11—0—0.

முன்னதாகச் சந்தா அனுப்புகிறவர்களுக்குமட்டும் பத்திரிகை அனுப்பப்படும் (வி. பி. இல்லை)

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

ஸ்ரீ அருணகிரிநாதர் 'திருப்புகழ் மாலை'	(160 பாடல்)	0—8—0
பாராயணத் தோத்திரத் திரட்டு		0—1—6
கம்பர் தமிழ் அகராதி	(940 பக்கம்)	7—12—0
	செலவுடன்	8—9—0
ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய கந்தர் அனுபூதி	(ரசபதி அவர்கள் விரிவுரையுடன்)	1—0—0
௸ திருவகுப்புகள்	௸ ௸	1—8—0

கிடைக்குமிடம்: அமிர்தவசனி காரியாலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்; சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ ஆவணி ௴ ஆகஸ்டு—செப்டம்பர் 1952	இதழ் 5

திருப்புகழ் அநுபவம்

—திருப்புகழ் மணி

பகுதி - 8

'தனிமை, தவம், காட்சி

நமது சித்தர்கள் உலகத்தவர்க்கு தெய்வீக வாழ்க்கையின் நெறியை உபதேசிக்கின்றார்கள். உலகெலாம் நிறைந்து முக்காலமும் கடந்த தெய்வம் என்ற பொருள் ஒன்றுதான். இரண்டாவதாக உள்ள வஸ்து கிடையாது. உள்ள வஸ்து எனும் தன்மையில் அது உள்மை—உண்மையாயிற்று. ஆகவே அந்த உண்மையும் ஒன்றுதான். அதுவே கடவுள்.

பண்ணின் இசைபோலப் பரமன்பால் நின்ற திறன்
எண்ணி அருளாகி இருக்குநாள் எந்நாளோ.

சிறு வாழ்வைத் தள்ளி, பெறு வாழ்வைப் பெறும் வழியை போதிக்கின்றார். சரீரம் நித்யமல்லாத வஸ்து என்பதும், செயலெல்லாம் ஈசன் செயலென்றும், ஆசை ஆணவமலக் கூடாகிய தேகத்தை முருகன் நினைவால் தியானத்தால் சுத்தமாக்கி முருகனிடத்தில் இயல்பாக கொடுத்துவிடுவது தான் பேரின்ப வாழ்வின் வழி என்று உபதேசிக்கின்றார். முருகனை மறந்து உலகப் பொருளை அனுபவிக்கும் மாந்தர்கள் துன்பத்திற்கும் நோய்களுக்கும் இரையாவதால், முருகனை நினைந்தே செய்யும் செயல்களில் ஈடுபட வேண்டுமாம். இவ்விதம் ஈடுபட்டு பெறுவாழ்வு பெறுவது திருப்புகழால் எய்தும் ஆதலால் திருப்புகழ் ஓர் முக்தி நூல். அந்த நூலின் மூல மந்திரம்—முருகா எனும் நாமம்.

பகுதி (10) நாம மகிமை

ஆண்டவன் நாமங்கள் சப்தப்ரம்மம். எங்கும் நிறைந்த கடவுளைக் காண்பதெப்படி? காண்பதும், காக்ஷியும், கண்ணும் தானாய் நிற்கும் பொருளை சப்தத்தால் உணரப் பெறலாம். கந்தா, கண்ணா, ராமா என்பவைபோன்ற அளவற்ற நாமங்களை தனக்கே உடையான் இறைவன். சிவசங்கர நாராயண கோவிந்த சரவணபவ நாமங்கள், ப்ரத்யக்ஷ முகமாக மனதை பேரானந்தத்தில் ஏற்றிவிடுகின்றன என்பதைப் பலர் அறிந்திருக்கின்றார்கள். ஆத்ம வாழ்வுக்கு ஆதாரமான நாமங்

உன்னில் உன்னும்என்றே உறுமொழியால் என்னிதயந்
தன்னில் உன்னி நன்னெறியைச் சாருநாள் எந்நாளோ.

கள் சுலபமாய் ஈடுபடுத்தும் சப்த ப்ரம்மங்கள். உணர்ச்சியுடனும் மூச்சை ப்ரம்மத்துக்கு அதன் நாம ரூப பாராயணங்களால் அர்ப்பணம் செய்து விட்டால், கலியுகத்தில் இதுவே சிறந்த மார்க்கமாகும். திருப்புகழ் எல்லாம் முருகநாம விமர்சனம்தான். அதில் ஏற்படும் ரஸங்கள் பல பல. அவைகளை ஒருவாறு உணர்த்துகின்றார் அருண கிரியார். நூல் பயனென்று கருதப்படும் திருப் புகழின் பொருளாகும் இச்சுவைகள் கந்தபுரா ணம், சிவபுராணம், ராமாயணம், பாரதம், பாக வத புராணங்களின் சுவைகளே; அனுபவமே முருகனுகும்; அவைகளை முறையே பார்ப்போம்.

நடராஜ தத்துவம்

(தென்னாப்பிரிகா - டர்பன் - திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

சாக்ஷாத் பரம்பொருளாகிய குஞ்சித பாத நடராஜப் பெருமான்,

"சீராரும் சதுர் மறையும்
தில்லை வாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும்
பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடை சூழ்
வைய மெல்லாம் ஈடேற
ஏராரு மணி மன்றில்"

திரையற்ற நீர்போல் தெளியஎனத் தேர்ந்த
உரைபற்றி உற்றங்கு ஒடுங்குநாள் எந்நாளோ.

அனவரத தாண்டவம் செய்தருளுவர். நாம் என்றும் அழியாப் பேரின்பப் பேற்றை அடைவதற்கு அவருடைய சேவையே வாய்ந்ததாகும்.

> "ஆட்டுவித்தால் ஆரொருவர்
> ஆடாதாரே"

என்றபடி அப்பெருமான் அசைந்தாலன்றி அணுவும் அசையாது; அப்பெருமான் அசையச் சரம் அசரமாகிய பொருள்களெல்லாம் அசையும் என்பதை விளக்குவதாம். நடராசப் பெருமானுடைய திருக்கரத்தின் குறிப்பானது 'என்னை யார் அடைகின்றார்களோ அவர்களை யான் எனதென்னும் இருவகைப் பற்றினின்றும் நீக்கிப் பரமானந்தமாய் விளங்கும்படி செய்கின்றேன்" என்பதை உணர்த்துகின்றது. இது பற்றியே திருநாவுக்கரசநாயனாரும்

> "கைத் நின்ற ஆடல் கண்டாற்
> பின்னைக் கண் கொண்டு
> காண்ப தென்னே ?"

எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

சந்திர சடாதாரியாகிய சிவபெருமான் சூக்கும பஞ்சாக்ஷரமென்றும், ஒருதலை மாணிக்கமென்றும் சொல்லப்படும் 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தின் திருவுருக் கொண்டு, ஆன்மகூட்டத்திற்கு நேர்ந்த பிறவிப் பிணியை நீக்கும் பொருட்டு, ஆனந்த நிருத்தம் செய்தலை அறிந்தவர்கள், பிறப்பு, இளமை, மூப்பு, பிணி சாக்காடு என்பனவற்றிலிருந்து நீங்குவர். திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமித்த இடத்தே சிவானந்த நிலை உண்டாதலினால், அதற்குரிய சாதனம் மேற்கூறியவாறு பஞ்சாக்ஷர வடிவமாய் திரு நிருத்தம் செய்தருளும் நடராச வடிவமேயாம். வாக்கினால் பஞ்சாக்ஷர செபமும், மனத்தினால் பஞ்சாக்ஷர தியானமும் செய்யுமிடத்துக் கண்ணினால் தரிசிக்கும் பஞ்சாக்ஷரம்

எனக்குள் நீ என்றும் இயற்கையாப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதிகொள்வ தெந்நாளோ.

நடராஜமூர்த்தி யாதலின், அம்மூர்த்தியைத் தரிசித்தல் அத்தியா வசியமாகும். அத்திரு நடனத்தைச் சற்குரு மூலமாகச் சந்தேக விபரீதமற அறிந்தவர்களுக்கே இனிப் பிறவா நிலை உண்டாகும்.

திரு நடனமானது பூதாகாய நடனம், மனாகாய நடனம், சிதாகாய நடனம் என மூத்திறப்படும். பூதாகாய நடன சேவை யானது, குறிக்கப்பட்ட தினங்களிற் சிவ ஸ்தலங்கடோறும் சென்று ஆகம விதிப்படி நடராஜப் பெருமானுடைய திரு நிருத் தத்தைத் தரிசித்தலாகும். மனாகாய நடன சேவையானது, பஞ்சாக்ஷர வடிவமாக விளங்கும் நடராஜ மூர்த்தியை மனத்தால் நன்கு தியானித்தலேயாம். சிதாகாய நடன சேவையாவது:—

"பஞ்சாக்ஷரத்தின் லட்சியார்த்தமாகிய சிவமே நான்" என்று சோகம் பாவனை செய்தலாம். இது சிவயோகம் எனப் பெறும். பூதாகாய நடன தரிசனத்தினால் இம்மைப் பயனும், மனாகாய நடன சேவையால் மறுமைப் பயனும், சிதாகாய நடன சேவை யால் மோக்ஷமும் சித்திக்கும். நடராஜப் பெருமான் முயலகன் மேல் நின்றருளிய திருப்பாதமும், தூக்கி யருளிய சிவந்த திருவடியும், பாதங்களில் சேர்த்திய திருச் சிலம்பும், புலித்தோல் ஆடையும், திருக்கையிலே பொருந்திய நெருப்பும், கச்சின் அழகும், திருவுந்தியிலே பொருந்திய உதர பந்தனச் சேர்வையும், உபவீதம் பொருந்திய திருமார்பும், வீசியருளிய சிவந்த திருக் கரமும், திருமுறுவலும், திருமுக மலர்ச்சியும், பின்னே தாழ்ந்த விரிந்த சடைக்கற்றையும், சர்ப்பாபரணமும் பிறவும் உடைய ராய், சிவகாமி யம்மையார் அதிசயித்துத் தரிசிக்கும்படி திரு நிருத்தஞ் செய்தருளுவர்.

சிவபிரான் முன்னொரு காலத்தில் தேவதாரு வனத்திலே, சடமாகிய கர்மமே பலன் தருகிறதென மயங்கி, ஈசனை மறந்து நாஸ்திகர்களாய் அவமே புரிந்து நின்ற முனிவர்களின் சித்த பரிபாகத்தைச் சோதித்து அனுக்கிரகம் செய்யும் பொருட்டு, ஒரு திருப்பாதத்தைத் தூக்கி ஆனந்த தாண்டவம் செய்தருளினர். அப்பொழுது தருகாவன ரிஷிகளால் வேள்வை, சர்ப்பம்,

---

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செய்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

முயலகன், நெருப்பு, மகா மந்திரங்கள் என்னும் இவ் வைந்தும் விடுக்கப்பட்டன.

(1) வேங்கை என்பது அஞ்ஞானத்தினால் உண்டான குரோதம். (2) சர்ப்பம் என்பது மாற்சரியமாகும். (3) முயலகன் என்பது அஞ்ஞானமாகும். (4) அக்கினி என்பது கோபமாகும். (5) மகா மந்திரங்களாவன சங்கற்பங்களாம். இவை தாருகாவன ரிஷிகளிடமிருந்து அவர்களுடைய சொருபத்தை மறைத்து நின்றன. சிவபிரான் அவற்றைப் போக்கி அவர்களுக்கு அருள் புரிந்தனர். இதுவே ஆனந்த தாண்டவமென்று சொல்லப்படும். மாயா மலத்தினால் உண்டான பாசத்தாற் கட்டுண்டு, நல்வினை தீவினைகளினால் மோதுண்டு உழலும் ஆன்ம கூட்டங்கள், சச்சிதானந்த நிலையை அடைவதற்கு இவ்வானந்த தாண்டவ தரிசனமே சிறந்த தரிசனமாகும். சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய இவ்வைந்து தொழில்களும் அவரது நடனமேயாம். பஞ்ச கிருத்தியங்களைச் செய்வனே உணர்ந்தவர்களுக்கே,

"என் செயலாவது
யாதொன்று மில்லை
இனித் தெய்வமே உன் செயல்"

என்னும் திடசித்த முண்டாகும். இதனால், நன்மை, தீமை சுகம், துக்கம் முதலானவற்றிற் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கும் மனமானது பதைப்பற்று உபசாந்த நிலையை அடையும்.

பழநித் தேவர்

ரசபதி

வைகாபுரிவாசி.

அன்பர்க்குத் தென்பழநி அருள் புரியும் தலம். வாழும் அதன் அடிவாரத்தில் வாவி ஒன்று உளது. தலத்தின் முதலில்

முச்சற்றுச் சிந்தை முயற்சியற்று சூதறிவாய்ப்
பேச்சற்றோர் பெற்ற ஒன்றைப் பெற்றிடுநாள் எந்நாளோ.

தரிசனம் தரும் அத் தீர்த்தம், அடிதொழ வருபவர் தூய்மை பெற நீராடும் துறையும் உடையது. கனிந்த மன அடியவர் காவடிகள் பல. வந்த பணி முற்றிய பின் ஆவி தூயரான அவர்களை, கடலெனப் பரவிய அந்த வாவிக் கரையில் காணலாம்: இது என்றுமுள்ள செய்தி.

நீர் நிறை அந்தக் குளம், வற்றும் காலமும் வரும். அவ்வமயம் பார்த்து, வலைவீசி மீன் பிடித்து வாழ்பவர்கள் பல்லோர். துடிக்கும் மீன்களை கடுக்கம் இன்றி, மலைபோல் குவிப்பர்; பங்கிடுவர்; பலர்க்கு விற்பர். நிலையிது பல சமயம் நிகழ்ந்துளது.

சேறும் நீருமான ஒரு சமயம், இச் செயல் செய்யப் பெற்றது. பொழுது போயது; இருள் மிகுந்தது. காலையில்தான் பங்கிட முடியும்; அதற்காக, நேர்ந்த குவியலைக் காக்க, நியமித்தனர் ஒருவரை.

காவலர் கடமை

கருத்த மேனி. வீரத் தோற்றம். இரும்பு போன்று இறுகிய தோள்கள். தடித்து நுனி கூர்மையான ஒரு தடி பிடித்த கை; இக்கோலம், இடும்பன் தோற்றம் போல இருந்தது. தோற்றம் அப்படி யெனினும், இதயம் மிகவும் இளகியது; நெற்றியில் நீறு. பழநித் தேவா! பழநித் தேவா என்று இடையிடை மொழியும் திருவாய்; இதனால், அக் காவலரைப் **பழநித் தேவர்** என்றே பெயரிட்டு அழைத்தது அவ்வூர். எவரேனும், பழநித் தேவா என்றழைத்தால், **ஏன் பழநித்தேவா** என்றே பதில் வரும். பழநிப் பரமன் நாமம், அவர் நாவில் அவ்வளவு பயிற்சியி லிருந்தது. உருவப் பொலிவாலும், உள்ளத் தூய்மையாலும் உயர்ந்தார் என்பதை உணர்ந்து, அருங்காவல் தொழிலுக்கு அவரை யழைப்பது, எவர்க்கும் வழக்கமாகி யிருந்தது.

காவல் செய்யும் பழநித் தேவர், இரவு முழுதும் கண்ணுறங்கிலர். மேலும், அவரது கைத் தடியைக் கண்டாலே, எவர் மனமும் களவு செய்யத் துணியாதே!

கண்ட இடமெல்லாம் கடவுள்மயம் என்றறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற் கொண்டிருப்ப தெந்நாளோ.

தோகையின் துயரம்.

பழநியின் ஒருபுறம் பரதவர் சேரி. ஆளனை யிழந்தேன்! ஆறு திங்கள் ஆயிற்றே என்று அளவிறந்து வருந்தும் ஒரு பெண், அங்கு வசிக்கின்றாள்; வறுமை வாழ்க்கை; உலர்ந்து வாடிய உடல்; இந்நிலையில், அத்தன் பழநி நாமந்தான் அவளுக்கு ஆறுதல்.

பர்த்தா இருந்தால், மீன்களில் அவளுக்கும் ஒரு பங்கு வரும். இல்லையே! என் செய்வாள்? மீன் பிடிக்க ஆரம்பித்த நேரம் தொடங்கி, விம்மி விம்மி யழலானாள்.

பழநியப்பா! என்னை யிக்கதி யாக்கினையே! தாயும் நீ! தந்தையும் நீ! ஆன்ம நாயகா! என் குறையை எவரிடத்தில் முறையிடுவேன்! கூடை மீன் ஒவ்வொரு வீடும் கொண்டு வரும்; வெறிச்சென் றிருக்கும் என் வீடு மட்டும்! அடியாள் உனது அடிமை யல்லவா! என்னைப் பிறர் எதிரில் எளிமைப் படுத்தலாமா! அது உனது அருட்குக் குறைவு அல்லவா என்று, மாலை மாலையாக் கண்ணீர் சோர மலையை நோக்கி வணங்கினள்.

இந்நிலை கண்ட இறைவன் திருவுளம் இரங்கியது; வேண்டுவார் வேண்டுவதே அருளும் விமலன், அவள் நினைவு நிறைவேற வெளியானான்.

கூடை மீன் கிடைக்கவில்லை யெனில், குடிமுழுகிப் போகுமோ என்று, பின் முகத்தில் பேசுவது சுலபம். குலத்தளவு ஆகும் குணம்; இதைக் குறிக்கொளவும் வேண்டாவோ? குல ஒழுக்க உணர்விற்கும், அமலன் மேல் கொள்ளும் அன்பிற்கும் தொடர்பில்லை. அது வேறு செய்தி; இது வேறு செய்தி.

நெற்றியில் நீறு; இனிய அவள் இதயத்தில், தண்டாயுத பாணி என்றும் உளான்.

ஏதேது செய்தாலும் என்பணிபோய் நின்பணியாம்
மாதேவா என்று வருந்துநாள் எந்நாளோ.

அருளுதயம்.

பயங்கரமான நள்ளிரவு. ஆனால், அந்தப் பயம், காவல் பழநித் தேவர்க்குக் கடுகளவும் இல்லை. நம்பன் நாமத்தை நா கவிற்ற, இதயம் பரமனை எண்ணி யிருக்கிறது; ஆதலின் எங்ஙனம் அச்சம் எழும்! விழித்த கண்ணர். விறுவிறுப்பு நிலையர். அஞ்சா நெஞ்சர். கடுமையாக பழநித் தேவர் காவல் செய்கிறார்.

அதோ வருகிறது, உருண்டு திரண்ட ஒரு உருவம். தோற் றத்தால் வயது பதினறென்று தோன்றுகின்றது.

ஆரல் மீன், வரால் மீன், வாளை மீன் முதலியவை அம்பார மாகக் குவிந்துளது.

பரமன் அருளால் சிறு துயில், பழநித் தேவரைப் பற்றியது.

காலம் பார்த்து வந்த உருவம், கையி லிருந்த கூடையில், மீன்களைப் பரபரப்போடு வாரி நிரப்பி, ஓட்டம் பெருகடை கொண்டு ஓடுகிறது.

திடுக்கென்று கண் விழித்தார் தேவர். கூடை மீன் கொள்ளை போவதை நோக்கினர்.

அடேய் நில்! நில் என்று ஆக்ரமித்து நடந்தார். அவர் தொடர்ந்த வேகத்தில் நிலம் அதிர்ந்தது. அவர் சொல்லளவிற்கு அடங்காது, ஓடுகிறது அவ்வுருவம். ஆத்திரம் மிகுந்தது.

அப்படியா செய்தி என்று ஓடித் தொடர்ந்தார். எங்கு ஓடினாலும் விடுவதில்லை உன்னை என்று, உறுத்துக் கதித்துத் துரத்துகிறார்.

எட்டிப் பிடிக்கும் அளவு அண்மையில்; திடீரென்று எட்டா நிலையனைச் செய்மையில். இங்ஙனம் கூடையோடு ஓடுகிறவன், கிட்டுவான் போலவும் கிளர்ச்சி செய்கிறான். இதனால் படபடத்த பழநித்தேவர், தட்டுப்படாத அவன் மேனி மேல், தடிநுனிபட தாவித் தாக்கினர்.

பேச்சுமூச் சில்லாத பேதைய வெள்ளமுற்று
நீச்சுநிலை காணமல் நிற்குநாள் எந்நாளோ.

அடி வாங்கிய அதன்பின், இத்துணை ஆடல் நிகழ்த்திய அவ் உருவம் அருவமாயது. **நான்தோறும் நீ என்னும் நம்பனடா! பழனியப்பனடா யாம்** என்று அடுத்து எழுந்தது அசரீரி.

அச்சமும் வியப்பும் அதிகரித்தது; உடல் குலுங்கியது; உள்ளம் அதிர்ந்தது; வெப்பமாக சுவாசம் வெளிப்பட்டது.

ஐயோ நீயா அத்தா! பழனியப்பா என்று வேதனை மிகுந்து, வீறிட்டுக் கூவி வீழ்ந்து, மூர்ச்சையானார் பழனித் தேவர்.

ஏழை பங்காளன்.

பங்கு பெற இயலாத பாவை குடில் எதிரில், பரமன் கூடையை இறக்கினான். இதோ உன் பங்கு மீன் என்று, கூவிக் கூறினான் அந்தக் குமரன். பரதவர் பாவை, விமலன் குரல் கேட்டு வெளி வந்தாள். கூடை மீன் கண்டு குதூகலித்தது மனம். கொணர்ந்தானை ஏறிட்டு நோக்கினள்.

யார் அப்பா நீ!

நன்றாயிருக்கிறது உன் நாடகம்! அலறி என்னை அழைக்கின்றாய்! எண்ணம் நிறைவேற்று என்கிறாய்! உனது கருத்தை நிறைவேற்ற வந்த என்னை, யாரப்பா நீ என்கிறாய்! **என்னை இன்னும் அறிந்திலையோ நீ** என்று அருளியபடி, விண்ணில் பாய்ந்து அருவமானான் விமலன்.

அன்பின் பண்பு

திக்பிரமை யடைந்தது மனம்.

என் அப்பனே! பழனியாண்டி! ஏழை பங்கில் இருந்தாயோ! உயர்ந்த ஞானிகள் ஏத்தும் உன்னை, பாவி நான் சிறுமீன் நினைவால் சிந்தித்தேன். வைதிக இதய வள்ளலே! கூடை மீனை என் பொருட்டுச் சுமந்து கொண்டு வந்தாய்!

இந்த உலக வாழ்வு இனி வேண்டேன்! காமிய மனம் உன்னைக் கருதுமாயின், அதன் உய்திக்கு இடம் இவ்வுலகில்

உள்ளத்தி னுள்ளேதான் ஊறுஞ் சிவானந்த
வெள்ளம் நினைந்து விடாய்தீர்வ தென்றாரோ.

உளதோ? தெய்வ[illegible] சிந்தனை, உள்ளிட்டுத்தின் வேலை வாங்குகிறது. கலிவிற்கு [illegible] ஆகாசம் அடைவதாக!

இதோ புறப்படுகிறேன்! இயன்ற அளவு பணி செய்தேனேல், என் ஆன்மா கடைத்தேறும்! வருகிறேன் பழநி ஐயா! வருகிறேன் என்று உரத்துக் கூவி உலகை மறந்தாள். ஆவேசம் கொண்டவள் போல் ஓடினாள்; விரைந்து மலையேறினாள்.

வைகறை நேரமாதலின், அளவில்லாத அன்பர்கள், விஸ்வரூப தரிசனத்தில் மெய்ம்மறந்து போற்றுகிறார்கள்.

தண்டாயுத பாணிக்கு அரோஹரா என்று வீறிட்டுக் கூவினாள், மலையேறி வந்த பக்தை. பலதரம் அவள் அழைத்த அந்த அழைப்பொலி, அன்பர்கள் துதி ஒலியையே அடக்கியது. அங்கிலை, எவரையும் மயிர் சிலிர்க்கச் செய்தது.

அடியற்ற மரம்போல் வீழ்கிறாள்; கண்ணீர் பெருகிக் கதறுகிறாள்.

தண்மை யில்லாத பாவி; வெகு தவறுகள் செய்த பாவி; உள்ளத்தில் நேர்மை யில்லாத பாவி ஐயா நான்! **உய்வேனோ யான் உய்வேனோ, உமையாள் மகனாய் ஆள்வானே** என ஓவென்று கதறுகிறாள் பாவம்!

ஹூம்! ஹூம்!! என்ன இது? அர்ச்சகர்மேல் அப்பன் ஆவேசித்துளன்; ஆவேசம், அச்சமும் அன்பும் எவர்க்கும் அளித்தது. அறிவு தோன்றிய நாள் முதல், **உன்னைத்தான் ஆராதித்த பாக்கியவதீ**! யாது வேண்டும் என்கிறான் ஆண்டவன்.

அப்பனே! பாவியான என்னையும், உன் அருள் வாக்கால் பாக்யவதி யாக்கினையா! இரசவாதிகள் போல், குற்றக் களிம்புடைய என்னைக் குணமாக்கிய உன் மலைமேல், என்றும் பணி செய்ய அருள்! பணிக்கு இடையூறு நேராதபடி, கடைக்கண்

**தானென தன்மை நழுவியே எவ்வுயிர்க்குந்
தானென உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ.**

பார்! மற்றொன்றும் வேண்டா மலை மாணிக்கமே என்று வீழ்ந்து எழுந்து வேண்டுகிறாள்.

அம்மனமே ஆக என்று மலையேறியது ஆவேசம்.

* * *

தெளிந்து எழுகிறார் பழனித் தேவர். ஆ! கனவா நான் கண்ட காட்சி? கூடை மீன் கொள்ளை என்ற அளவில் குறித்தேன்! துரத்திய போது என்ன ஜாலம்! அகப்படுவது போல் ஒரு அதிசயம்; இமையளவில் வெகு தூரம்; இந்த விசித்திரத்தை உணர நேரமின்றி, என் அப்பனை ஓங்கி யல்லவா அடித்தேன்!

என்னை அடிக்கிறாயே! நான் உனது அப்பனடா! தெரியவில்லையேடா உனக்கு என்று கூறாது கூறிய பெருமான் திருவுளம், யாது யாது கருதியதோ?

பாழும் தடியால், பழனியப்பனை அடிக்கும் அளவு, பாவக் கோட்டை யாயினேன். என் சடலத்தைச் சுட்டெரிக்க வேண்டாவோ? நரகந்தான் என்னை விழுங்கும்!

கும்பிடக் கொடுத்த கையால், கோல் கொண்டு அடித்தேன்! வலம் வர வளர்ந்த கால்களை, துரத்தப் பயன் படுத்தினேன். காண அளித்த கண்கள், உறுத்து நோக்க உதவின. குளிர்ந்து நினைக்க உதவிய இதயம், கொதித்துக் கதித்து இருண்டது. கொடுமை! கொடுமை!!

அறுக்க வேண்டும் கைகளை! நுங்குபோல் தோண்ட வேண்டும் கண்களை! நறுக்க வேண்டும் நாவை. களைய வேண்டும் கால்களை! இத்தண்டத்தை எம்பிரான் சந்நிதியில் நடத்தவேண்டும் நான்; அப்போதுதான் என் மனம் ஆறும்!

பொழுது விடியும் நேரம். அதோ சேவைக்குப் போகிறார்கள் பக்தர்கள். கதிரவன் உதயமாகி உச்சியாகி, மாலையாகி மறைந்து, அன்னிரவு வழிபாடு நடந்த பின், அன்பர்கள் மலையி லிருந்து அடிவாரம் வருவார்கள். மகத்தான அந்த நேரத்தில், மலையேறுவேன். மணிபீடத்தில் உறுப்புக்கள் ஒவ்வொன்றாய் அறுத்திடுவேன். தப்

எங்கெங்கும் பார்த்தாலும் இன்புருவாய் நீக்கமின்றித்
தங்குந் தனிப்பொருளைச் சாருநாள் எந்நாளோ.

பவர்கள் யாரும் இரார். ஆம். அதுதான் சரியான யோசனை யென்பது, பழநித் தேவர் செய்த சிந்தனை.

காவலை மறந்தார். வீட்டை யடைத்தார். உறையி லிருந்த வாளை உருவினார். சாணை பிடித்தார். குடும்பம் இவர் குறிப்பை அறிந்திலது. பரிதி உதித்துப் பத்து நாழிகை யாயது.

* * *

பழநித் தேவரிடத்தும், பரதவர் பாவை யிடத்தும் உருக்கரந்த உமைகுமரன், கனிவு மிக்க மன்னன் கனவில் உடனே காட்சி யாயினன்; நடந்தவை நவின்றான். வரலாறு கேட்டு வருந்துகிறார் மன்னர்.

அன்பனே கேள்! பழநித் தேவன் பரம பக்திக்கு ஈடுமில்லை எடுப்புமில்லை காண்! ஏழைக்கு உதவுவது என் கடன்; கம்பால் அடித்தது காப்பாளன் கடன். கல்லடி பட்டு, வில்லடி தாங்கி, தன் அன்பரை உலகிற்குக் காட்டித் தந்தார் கண்ணுதலார்.

தடியடி தந்த என் அன்பன் பழநித் தேவனை, யான் தரணி யறியச் செய்கின்றேன்; இதற்கு நீ தளர்ந்து வருந்துவது தவறு. செய்தி யறிந்த அன்பன் அவன், இன்றிரவு தன் உறுப்புக்களைச் சேதிக்கும் சிந்தனையி லிருக்கின்றான்.

அடித்த கைக்குக் கடகம் அணிவதுதான் அறிவுடைமை. எனக்காக, விரைந்து அது செய் என்று அருளினன் விமலன்.

காவலர் உடனே கண் விழித்தார். மகிழ்ந்தது மனம். கொல்லரைக் கூப்பிட்டார். பொழுது விடிதற்குள் இரு பொற்கடகம் சித்தமாயிற்று.

* * *

எண்ணுதும் எண்ணி, தலை குனிந்து, கண்ணீர் பெருக்கி கந்தப் பெருமானை வந்தித்தபடி யிருக்கிறார் பழநித் தேவர்.

உம்மை யழைத்து வர, மன்னர் உத்தரவு என்ற குரல் கேட்டு திமிர்த்தார்.

என்னுக்குள் என்னைப்போல் எங்கும் வியாபகமாய்
உள்ள ஒன்றை உள்ளபடி ஒருநாள் எந்நாளோ.

காவலர் பலர் வந்துளர். திகைத்தார். குழம்பியது மனம்; குற்றம் யாது? அரசர், இரவில் செய்த என் பிழையை யறிந்துளரா? ஆனால் நல்லதாயிற்று. எனினும், யான் முடிவு கட்டிய அளவு, அரசர் தண்டம் அளிப்பாரா? பார்ப்பம் என்று பயந்தே சென்றார். காவலர் தொடர்ந்தனர்.

அமைச்சர்கள், சேனை அதிபர்கள், புலவர் பெருமக்கள் முதலிய பலரும், அவைக் களத்தில் நிறைந்துளர்; என்றுமில்லாத பொலிவு அன்று நிறைந்துளது.

காவலர் விநயத்தைப் பழநித் தேவர் கண்டிலர். அவர் மனம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. அரசவையை இது வரை கண்டவர் அல்லர் அவர்.

வருக ஐயா! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக என்றபடி, அரியணையி லிருந்து எதிர்கொண்டு சென்று, அரியதொரு பீடத்தில் அமர வைத்தார் அரசர்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, நாடக உபசாரம் நடத்துகிறாரா அரசர் என்று, பழநித் தேவர் எண்ணுகிறார்.

அரசே! செய்யும் தண்டனையை விரைவில் செய்து விடும், இதோ சித்தமா யிருக்கிறேன் அடியேன்!

இதோ யானும் சித்தமாகத்தான் இருக்கிறேன்! இன்னுமா தாமதம்? கொண்டு வாருங்கள் என்று பணியாட்களை நோக்கினார் பார்த்திபர்.

சபையில் இருக்கும் எவர்க்கும், ஒன்றுமே விளங்கவில்லை. என்னமோ நிகழப் போகிறது என்பது மட்டும் தெரிகிறது. பரபரப்புடன், மன்னரையும் தேவரையும் மாறி மாறிப் பார்க்கிறார்கள்.

உடனே ஒரு பொன் தாம்பளம் வந்தது. காவலர் அதனிலிருந்து எடுத்த பொன் கடகம் இரண்டை, இரு கரங்களிலும் தரித்தார். பீதாம்பரம் போர்த்தினார். கட்டி கட்டியான பொன்னையும், நவரத்தினங்களையும் காணிக்கையாக வைத்தார்.

கேடில்பகு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமேல்
ஆடுஞ் சுகப்பொருளுக் கன்புறுவ தெந்நாளோ.

அரசே! என்ன இது? கையை வெட்டுங்கள்! கால்களைத் துண்டியுங்கள்! அது நியாயம். தண்டனைக்குரிய உறுப்புகட்கு அணிபல அணிவது, பொன்னுடை போர்ப்பது அறமாகுமோ?

சபையி லிருப்பவர்கள், என்ன இது என்று ஒருவரை ஒருவர் நோக்கி மிரளுகிறார்கள்.

கைகுவித்த காவலர், புரிந்து கொண்டேன் தங்களை; அன்பரே நன்றாகப் புரிந்து கொண்டேன்! என் கனவில் பழநி யாண்டவன் எல்லாம் அறிவித்தான். எம்பெருமான் அருளிலதேல, அன்பு மிக்க தங்களை அறிய இயலாது எங்களால். உத்தம தங்களை இதுவரை உணராதிருந்த எம் பிழை பொறுக்கவேண்டும் என்று, யாமன்றோ வேண்ட வேண்டும் என்று விநயமொடு விளம்பினர் வேந்தர்.

அதன்பின், வாவி மீன் வரலாறு; பழநித் தேவர் காவல்; பரதவர் பாவை வேண்டுகை; பரமன் செய்த உதவி; காவல் தேவர் தடியடி; அமலன் கனவில் அருளிய செய்தி முதலிய அனைத்தும், அன்புக் கண்ணீர் பெருக ஆர்வமொடு சபைக்கு அறிவித்தார அரசர்.

* * *

அரோஹரா என்ற ஒரு பெருங் குரல்.

சபையி லிருந்த சண்முக பத்தர் ஒருவர், ஆவேசம் கொண்டு ஆடுகிறார். எவர் மனமும் கிடுகிடென ஆடியது.

அன்பனே பழநித தேவா! உன்னை யாம் என்றும் உணர்வம், பிண்டத்தில், உனது உள்ளம் என் கோயில்; அண்டத்தில், வனரும் நம் சந்நதிக்கு வா!

அவ்வளவில் ஆவேசம் மலையேறியது. கண்டவர் மனம் பாகாய்க் கரைகிறது.

* * *

ஓட்டம் பெரு கடையாய்ப் பழநித் தேவர் மலை நோக்கி ஓடுகிறார்; படி யேறுகிறார்; என்ன வேகம்! சந்நதி யடைகிறார்.

ஈனந் தருநாடு இதுநமக்கு வேண்டாவென்று
ஆனந்த நாட்டில் அவதரிப்ப தெந்நாளோ.

பிரபோ! முடிவிலா அருளால் குடையை முடிமேல் தாங்கினை! தடித்த புத்தியுள்ள என் தடியடியும் தாங்கினை! குறைவுறாதபடி, அடியவர் நிறைவுறவும் அருளுகிறாய்.

அருளுடைய உம்மை இனி அரைக்கணமும் பிரிந்திரேன்; வேதாகமங்களால் விளம்ப முடியாதது; யோக விவேகிகள் அறிவில் ஒளிர்வது உமது திருவடி. அதன் நிழலில் யான் இருக்க அருள் என்று வீறிட்டுக் கூவி வீழ்ந்தார்.

அவரது திருமேனியி லிருந்து எழுந்தொளிரும் ஆன்மா, நட்சத்திர ஒளி பரப்பி, பரமன் சந்நிதியில் படர்ந்தது.

அரச சபையி லிருந்து தொடர்ந்து வந்த அரசர் முதலிய அனைவரும், மெய்ம்மயிர் சிலிர்த்து கைகுவித்து நின்றனர்.

* * *

அடிமுதல் முடிவரை, படிகளைச் சுத்தம் செய்தாள் பரதவர் குலப் பாவை; மாக்கோலம் இட்டாள்; காலை முதல் மாலை வரை அத்தொண்டு. அர்த்த ஜாம பூஜையின் பின், பக்தர்கள் பாதம் பட்ட இடம் என்ற எண்ணத்தால், ஆலய மதிலை உருண்டு புரண்டு வலம் வந்தாள்; அதிகாரிகள் கனவில் பழநியப்பன் அருளியபடி, இரு வேளைக்கும் கோயிலார் பிரசாதம் கொடுக்கிறார்கள்.

பலகாலம் இங்ஙனம் பணி செய்த பக்தைக்கு, அதன் பயனாக, 'தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி, அல்ல லறுத்து ஆனந்தம் ஆக்கினான்' நம் ஆண்டவன்.

ஆளாயெனை யருளாயென மரிவைக்கொரு குடை
நீளாசல சரமீதர நிசியார்கர வினனாத்
தாளாளனா பழநிப்பெயர் தடியாலடி கொடுமே
வாளாளனை யுயர்வாக்கிய மணியே யெனை மறவேல்

என்று இவ் வரலாற்றை இன்னும் பாடுகிறது தமிழகம்.

[சலசரம்-மீன். ஈதர-கொடுக்க. நிசி-இரவில். கரவினனா—கள்வனாக. தாளாளன்-(காவல்) முயற்சியன். வாளாளனை-(வீர)வாள் உடைய பழநித் தேவனை.]

வெய்யபுலி பார்த்து விழித்திருந்த அல்லறத்
துய்ய அருளில் துயிலுநாள் எந்நாளோ.

ஸ்ரீவைஷ்ணவர் செல்வம்.

வி. எஸ். வேங்கடராமன்

25 - ஆம் லைப

(190-ஆம பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றால் கடவுள் தீயையும் விழுங்குவான்

"பாண்டீரகம்" என்ற ஆலமரத்தடியில் இடைச் சிறுவர் விளையாடிக் கொண்டிருக்கப் பசுக்கள் புல்மேயும் ஆசையால் வெகு தூரத்திலுள்ள தட்டைப்புல் காட்டுக்குப் பல காடுகள் கடந்து போயின. பலராமகிருஷ்ணர் பசுக்களைத் தேடிக் கொண்டு பசுக்களின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட அவைகள் கண்ணன் குரலுக்கு எதிரொலி யிட்டன. பசுக்களுடனும் நின்ற சில இடைச் சிறுவர்களைக் காட்டுத்தீ நாலுபக்கமும் திடீரெனச் சூழ்ந்து கொள்ள அவர்கள், கண்ணனைச் சரண் புகுந்து அழைக்கக் கண்ணன், தன் பந்துக்களைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்.

கண்களை மூடிக் கொள்ளுங்கள்! பயப்படாதீர்கள்! என்று கண்ணன்கூற, அவர்கள் கண்களை மூடிக் கொள்ள கண்ணன் அக்காட்டுத் தீயை விழுங்கி அவர்களை எல்லாப் பசுக்களுடன், முன் விளையாடிக் கொண்டிருந்த ஆலமரத்தடிக்குக் கொண்டு போய்விட, அவர்கள் கண்களைத் திறந்து பார்த்து ஆச்சரியம் அடைந்து கண்ணனை வாழ்த்தினார்கள்.

காத்தியாயனி, கன்னிகளுக்குக்
கணவனை அருளி வருபவள்,

மார்கழி நீராடல்

பாவை நோன்பும், பதிகளைக் கன்னியர் வேண்டலும்

பாவை நோன்பு என்பது, கன்னிப் பெண்கள்தாம் வழிபடும் காத்தியாயனி பார்வதி தேவியை (பாவை) நோக்கித் "தங்கட்கு

வேட்டைப் புலைப்புலையர் மேவாத வன்னமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ.

நல்ல பதிகள் கிடைக்கவேண்டும் என வேண்டிப் பூஜைசெய் வது. குறிப்பு:—

> மாலே மணி வண்ணா மார்கழி நீராடுவான்
> மேலையார் செய்வனகள் என்றார் நாச்சியார்.

“மேலையார் செய்வன” என்றது, பாவை நோன்புக்குப் பிரமாணம், உலக நாகரிகம் உண்டான காலமுதல் சான்றோர் களின் ஆசாரமான நல்ல பழைய வழக்கம், என்பதைக் குறித்தது. தொல்காப்பியர் கூறிய “உயர்ந்தோர் நிகழ்ச்சி” சிஷ்டாசாரம் எனப்படும்.

கோபீ வஸ்திராபகரணம்

ஆவணி புரட்டாசிகளில் மழை பெய்து ஓய, ஐப்பசி கார்த் திகைகளில் குளிர் தோன்றி மறைய, தேவர்கட்கு விடியற்கால மாம் மார்கழி முதல் நாளில் விடியற் காலையில், அந்த இடைச் சிறுமிகள் பாவை நோன்பு ஆற்றக்கூடிப் பலரையும் அழைத் துக் கொண்டு யமுனையில் நீராடிப் பார்வதியை வணங்கிக் “கண் ணனே எங்கட்குக் கணவனாக வேண்டும்” என்று வேண்டினவராய் மணற்பாவைதிருவுருவத்தைப் பதினாறு உபசாரங்களாலும் தியானித்து வழிபாடு செய்து முடித்து, இன்று முதல் இம்மாதம் முழுதும் இந்நோன்பு செய்வோம் என்று பேசிக்கொண்டு, தினமும் வந்து வழக்கப் போல் பூசை செய்து வந்தார்கள்.

ஒழுக்கு முறையின் தவறுக்குத் தண்டனை.

இச்சிறுமிகள், தினமுமே கரையில் சட்டை பாவாடை மேலாக்குகளை அவிழ்த்து வைத்துவிட்டுக் கண்ணனது லீலைப் பாடல்களை ஆனந்தமாகப் பாடிக்கொண்டு, யமுனை யாற்றில் இறங்கிச் சில நேரம் நீச்சலடித்து நீரில் விளையாடி வந்தார்கள்.

> தனக்காகச் செய்த செயலின் பயனைத்
> தான் தாந்தானே வேண்டும்.

> ஆங்காரமென்னுமத யானைவா யிற்கரும்பாய்
> ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ.

கண்ணனுன பகவான், சிறுமிகள் குளிக்கும் இடத்திற்குத் தற்செயலாக வந்து, ஒரு நவறைக் கண்டதும், அச்சிறுமிகளு டைய ஆடைகளையெல்லாம், கைகளால் வாரி எடுத்துக் கடப்ப மரத்தில் ஏறிக் கிளைகளில் தொங்கவிட்டுத் தானும் அமர்ந்து, இச்சிறுமிகள் எப்போது கரையேறுவார்கள் என்று எதிர் நோக்கியிருந்தார். சில கோபிமார்கள் முதலில் தன்னைப் பார்க்கவே, கண்ணன் சிரித்துக் கொண்டே "இப்படியா மடுவில் இறங்கி நீராடுவது? என்று கேட்டார்.

உடனே நாணமடைந்த அந்நங்கையர் கரையேற விரும்பி, அறையில் ஆடையில்லாததால் கரைக்கு வரவும் முடியாமல், கழுத்தளவு தண்ணீரிலே நின்று கொண்டே, சேலைகள் எல்லாம் கிளைகளிலே தொங்குவதைப் பார்த்து நிற்கக் கண்ணன் 'இங்கே இம்மரத்தடிக்குவந்து அவரவர் புடைவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். பொய் சொன்னதே இல்லை. விளையாடவும் இல்லை. சத்தியமாகச் சொல்கிறேன். ஒவ்வொருத்தராகவும் நீங்கள் வரலாம். சேர்ந்தும் வரலாம். என்று பரிகாசம் பண்ணினர்.

கண்ணன் விளையாடுவதில் ஈடுபட்ட அந்தப் பெண்கள் குளிரால் நடுங்கிக் கொண்டே "என்ன கண்ணு! எப்போதுமே விளையாட்டா? அநியாயம் பண்ணுதே, நீ தோழன் அல்லவா? நந்த கோப குமாரன் தானே! நடுங்குவதைப் பார்க்க வில்லையா? என்று முதலில் நயந்து கேட்டார்கள்.

கண்ணன் கல்லுப் போல் அமர்ந்து கோபிமாரைப் பார்த்துக் "கொல்" என்று சிரித்துக்கொண்டே இருக்க, அப்பெண்கள் ஹே ஸ்யாமசுந்தர! நீ சொல்கிறபடி நாங்கள் அடிமைஆகிறோம் ஆடைகளைத்தா. இல்லாவிட்டால் நந்தகோபரிடஞ் செல்வோம். மறைப்பு (ஆடை) வேண்டுமே என்று பயமுறுத்தினர்கள்.

நான் பெரிய எக்ஸ்ரே (Xray) அல்லவோ.

கோபி மார்கள் ஆடை என்ற அர்த்தத்தில் மறைப்பு என்ற சொல்லைச் சொல்லி வேண்டினதைக் கேட்டதும்

பொல்லாத காமப் புலைத் தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள் எந்நாளோ.

கண்ணன் யுக்திகளால் அப்பெண்களது அஞ்ஞானத்தைப் போக்க நினைத்துப் பேசத் தொடங்கினர். தமால நிறத்தவன் தர்க்கம் கேட்கவா வேண்டும்?

கண்ணன் :— கோபிமாரே! என்னிடம் மறைப்பு உங்களுக்குத் தர இல்லையே. எண்ணிப்பாருங்கள்.

கோபிமார் :— லோகநாத! நீர் எங்கள் ஆடைகளைக் கிளைகளில் தொங்கவிட்டு இருக்கிறீரே. அந்த ஆடைகளையே கேட்டோம். தாரும் என்று வேண்டுகிறோம்.

கண்ணன் :— பிறர்க்கு உள்ள மறைப்பினை என் சொந்த திருஷ்டிப்படி, நான் அப்புறப் படுத்தவில்லையே.

கோபிமார் :— கரையேறி என்னிடம் நீங்கள் வந்து சேலைகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னீர்களே. அந்தச் சேலைகளைத் தாரும் என்று கேட்கிறோம்.

கண்ணன் :— கண்ணை மூடிக் கொள்ளுங்கள் என்று சொன்னேனே! கண்ணை நீங்கள் மூடிக்கொண்டால் மறைப்புத் தானே வந்துவிடுமே.

கோபிமார் :— உலகம் எங்களைப் பார்க்காமல் இருக்கச் செய்யும் மறைப்பினை, நீங்கள் தரவேண்டும் என்று கேட்கிறோம்

கண்ணன் :— உலகத்திற்கு மறைப்புத் தரவல்ல ஆண்டவன் உலகத்திலேயே அவன் ஒருவன் தான்; என்னிடம் மறைப்பு இல்லையே.

கோபிமார் :—பிறர் எங்களைப் பார்ப்பதை, நாங்கள் இந்த நிலையில் பார்க்காமல் இருக்க, எங்கட்கு வேண்டிய ஆடைகளை இப்போது கேட்கிறோம்.

கண்ணன் :—பார்க்கப்படுவது ஒன்று, —பார்க்கும் அந்த கொடியிலே பார்ப்பவனை உலகில் காணுவதில்லையே. அவ்வளவு வேகத்தில் கொடிப் பொழுது பறக்கிறதே. நீங்கள் பிறரைப் பார்க்கவே போவதில்லை· எதற்கு மறைப்பு வேண்டும்?

வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந்தனை யருளாற் சாருநாள் எந்நாளோ.

கோபிமார் :—நாங்கள் பிறரைப் பார்க்கிறவர்கள் அல்ல. பார்க்கத் தகுந்தவர்களே பெண்கள் என்றால், விரும்பப் படத் தக்கவர் என்பதுதானே நேர்மையான பொருள். ஆடைகளைத் தாருமே.

கண்ணன் :—இந்தப் புடவைகளெல்லாம் எப்படி உங்கள் உறுப்புக் களை மறைத்துவிடப் போகின்றன. எக்ஸ்ரே (Xray) இதைப் பார்க்க முடியா தது இந்த உலகத்திலே ஒன்றேனும் உண்டா? நானே பெரிய (Xray) அல்லவோ. எக்ஸ்ரே—தான் முதலிற்கண்டு பிறரைக் காணச் செய்கின்றது; நானும் அவ்வாறே, எதனையும் முதலில் காண்பேன்.

கோபிமார் :—புதிர் போட்டாற்போல நீங்கள் சொல்கிற— இந்த உலகிற் காணப்பெறாத—சித்தயோகி தேவபுருடோத்தம ராம் அந்த எக்ஸ்ரே ஆள், தம்மைத் தாமே மறைத்துக்கொள் ளக் கொண்டதாகச் சொல்கிற—எங்கள் கண்ணிலே காட்டாத-- மறைப்பு எங்கே இருக்கிறது. எப்படி அது இருக்கும். சொல்லுமே கண்ணே! நாணமே நகையாகக் கொண்ட நங்கையராம் நாங்கள், இந்த இழிநிலையில் இருக்கிறோம். அருளுமே அந்த மறைப்பை.

கண்ணன் :—உங்கள் மறைப்பு உதவே உதவாது. அந்தப் பெரிய எக்ஸ்ரேயை யோகிகள் இன்றும் கண்டுபிடித்து வருகிறார்கள்.

கோபிமார்கள் :—நாங்கள் ஒன்றுஞ் செய்யவும் முடியாது, பேசவும் முடியாது. எங்கட்கு "ஆடை வேண்டும்" என்றிருந்த அறியாமை தொலைந்தது. வழி சொல்லும், கேட்கிறோம். வழிவழி வந்த அடியோம் அல்லவோ.

கண்ணன் :—நீங்கள் எனது அடிமைகள் என்பது உண்மையானால், நான் சொல்லியபடி நீங்கள் செய்பவர்கள் என்பது உண்மையானால், புன் முறுவல் பூத்த பூம்பாவைகாள் இங்கு வந்து ஆடைகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்.

பிறகு அந்தக் கோபிமார் நெடுநேரம் குளிர் தாங்கச் சக்தி இழந்தவராகி, இருகைகளாலும் பெண் குறியை மறைத்துக் கொண்டு கரை யேறினார்கள்.

எண்ணரிய சித்தர் இமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தரருள் பாலிப்ப தெந்நாளோ.

கண்ணன் அவர்கள் பக்தியைக் கண்டு மகிழ்ந்து, பின் வருமாறு எச்சரிக்கை செய்தார்.

நீங்களோ விரதம் அனுஷ்டிப்பவர். பன்னிரண்டு வயசுவரை அரையில் ஆடையில்லாமல் நீரில் குளிக்கலாம். பன்னிரண்டு வயசுக்குமேல் ஓரிரண்டாண்டு அதிகம் வளர்ச்சிபெற்ற கன்னியராம் நீங்கள், அரைத்துணியில்லாமல் யமுனையில் குளித்தது, "நீர்த் தெய்வமான வருணனைப் பரிகசித்ததாகும்." இந்தப் பாவம் நீங்க இருகைகளையும் தலைக்குமேல் கூப்பி வணங்கி, ஆடைகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்.

உடனே தங்கள் குற்றம் உணர்ந்து நாணத்தால், ஒரு கையால் பெண்குறியை மறைத்துக்கொண்டு மற்றொரு கையினை மட்டும் தூக்கி ஒற்றைக் கைச்சலாம் இட்டனர்.

கண்ணன் அவர்களைத் திருத்த நினைத்து, "பெரியோர்க்கு, ஒற்றைக் கைச்சலாம் இட்டவர்க்குத் தண்டனை—அந்தக் கையை வெட்டிவிடுவதே, இரு கைகளைக் கூப்பி வணங்குவதே முறை, என்றார். உடனே, கர்மபலதாதா ஆகிய கண்ணனை, அவன் சொன்னபடியே இரு கைகளையும் உயரத் தூக்கி, அக் கோபிமார்கள் வணங்கினார்கள்.

பிறகு கண்ணன் ஆடைகளைத்தர, அவர்கள் ஆடைகளை உடுத்தி அணுகி இருக்க, "உங்கள் விரதம் சபலம் ஆகும். வறுத்த விதை முளைக்காது. என்னை விரும்பிய மனம், எதனையும் விரும்பாது. கோகுலம் போங்கள். நீங்கள் என் மனைவிமார் ஆவீர், என்று விடை தந்தனுப்பினார்.

குறிப்பு :—பகவான் கண்ணன், கோபிமாரிடம், தான் நிராவரணன், (மறைப்பு இல்லாதவன்); நான் நிர்மலன் (மனமாசு இல்லாதவன்) என்பதையும், அக்கோபிமார் சாவரணர் (மறைப்புக் கொள்பவர்) என்பதையும், அக்கோபிமார் சமலர் (மனமாசு உள்ளவர்) என்பதையும், தன் சம்வாத லீலையால் காட்டினார்.

மேலும் அக்கண்ணன், அக்கோபிமாரிடம், உளவன்பு (Mentel love) இருப்பது கண்டு உடலியல் அன்பும் (Phys'ical

---

என்னறிவை உள்ளடக்கி என்போல் வருமவுனி
தன்னறிவுக் குள்ளேநான் சாருநாள் எந்நாளோ.

love) இருக்கிறதா என்று பரீக்ஷித்து இருப்பது கண்டு மகிழ்ந்தார்.

மேலும், அக்கண்ணன், "அரையில் ஆடையில்லாமல் நீராடுவது பாவம்" என்பதைத் தன் பேரர் மூலமாக (நாரதர்) காட்டித்தானே அப்பாவிகளாம் (குபேர மக்கள்) நளகூபரமணிக்கிரீவர்க்குச் சாப மோக்ஷமும் செய்வித்து, தன் கண்முன் கண்ட அப்பாவத்திற்குத் தண்டனையாக அக்கோபிமாரை இருகைகளையும் உயரத் தூக்கித் தொழச் செய்து பிழை பொறுத்து, உலகத்தை நல்வழியில் நிறுத்தினார்; என்னே எம்பெருமானின் க்ஷமையும் தயையும்.

அதிசயம் அநேகமுற்ற பழநி (9)

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.,

(157 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை ஞானமலை. ஆதலின் அதனை வலம் வருவாரும் ஞானச் செல்வராவர். அதனால்தான் வலம்வரும் அன்பர்கள் தாமும் ஞானம் பெறவும் பிறரும் பெறுமாறு செய்யவும் வேண்டிக், காயமும் நாவும் நெஞ்சும் ஓர் வழியாகும் உபாயமாகிய அன்பு கனிந்த 'அரோகரா' ஒலியே எங்கும் எழுப்பிச் செல்வர். இதுவும் நாத நிலையத்தின் மேலெழுந்துன்னது. ஞானம் என்ற உண்மையை விளக்கியவாறும்.

மலையைச் சுற்றிலும் வலம் வரும்போது காண்பது என்ன? கண்ணிழந்த குருடர், காலிழந்த நொண்டிகள், பெற்றோரிழந்த அனாதைகள், பெருநோயாளர், அழிபசியாளர் முதலியோர், ஒரே குரலில் பழநிநாதனை இறைஞ்சி நிற்பர். அதனைப் பார்ப்போர் இறைவனை வாழ்த்தி,

---

* நீக்கிமலக் கட்டறுத்து நேரே வெளிவி லெம்மைத்
தூக்கிவைக்குந் தானைத் தொழுதிடுநாள் எந்நாளோ.

காசோ, அரிசிப் பொரியோ, பிறவோ வழங்குவர். இக் காட்சியும் நமக்கு நல்ல படிப்பினையாகும். அங்கஹீனர், பெரும்பிணியாளர் முதலியோர் இங்ஙனம் நிகழக் காரணம் ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின் கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் தன் பேரருளை அன்புகனிந்த உள்ளத்தால் வந்தித்து வாழ்த்தாத தீவினையேயாம். ஆயினும் குற்றவாளிகளை அரசாங்கம் தண்டனைக்காகச் சிறைக்கு அனுப்பும். ஆனால் சிறைவாசி கட்கு உணவு அளித்தலை மறுப்பதில்லை. அதுபோல் செம்மேனி வேலனைச் சேராத தீவினையாலே நோயுற்று ரானதும், பசியுற்றானதும் கந்தனது மறக் கருணை ஆகும் ஆயினும், வழிபடும் அன்பர்கள் அவர்கட்கு இளம் பூரணனை வாழ்த்தி ஏதேனும் உதவுவது ஆண்டவன் அறக் கருணையையும் விளக்கியதென்றறிய வேண்டும்.

தன்னிடம் சார்ந்தார்க்கும் . சரணளிக்கும் தண்ட பாணியின் மலை, அவர்கட்கு.

'ஐயமிடுமின்! அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனும் பிறர்க்கு இட்டுண்மின்-தெய்வம
ஒருவனே என்று உணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்'

என்ற முத்தியுபாயமும், வினை நீக்கும் மெய்ந் நெறியும் உணர்த்துகிறதென்க.

சேரவிநாயகர் :—

மலைவலம் வந்து பாதவிநாயகரை மறுபடியும் வணங்கி மலையின் முன்புறமுள்ள படிகளின் மேல் கால் வைக்கும்

பச்சைசந்திர மாயச்சிவந்த மாகம் கலந்துவகை
இச்சையுடன் சென்றுமலை மாங்காண்ப தெந்நாளோ.

போது காட்சியளிப்பது சேரவிநாயகர் ஆலயமாகும். சேரர் பெருமானுக விளங்கிய, நம்பியாரூரரின் இன்னுயிர்த் தோழராய் அவருடன் கயிலை சார்ந்து 'ஞான உலா'ப் பாடிய, சேரமான் பெருமாணுயனர் என்னும் கழறிற்றறிவார் (Solomon of South India) நாயனர் என்பவர் எடுத்த சிற்றலயம் இது. ஆதலின் இதனுள் விளங்கும் விநாயகரும் சேரவிநாயகர் எனப்பட்டார். இதனை விளக்கவே இதன் வாயிலில் குதிரைமீது செல்லும் சேரர்கோன் திருவுருவம் ஒரு சிலையில் பொறிக்கப்பட்டுள்ளது. மலைமீதும் கர்ப்பக் கிருகத்தின் வடபால் சுவற்றிலும் இவ்வித உருவுள்ளது. மேலும் சேரநாட்டு மக்களுக்கும், சேர மன்னர்கட்கும் இப்பழநித் தலத் தொடர்பு நெடுநாளிருந்தது என்பர். இக் கருத்தை மனத்திற்கொண்ட நம் அருணகிரியார், திருவாவினன் குடித் திருப்புகழில், நாட்டுக்கும் சேரருக்குமிருந்த தொடர்பு கூறவந்து

'ஆதரம்பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முன்நாளினில்
ஆடல்வெம்பரி மீதேறி மாகயி—லையிலேகி
ஆதியந்த உலா ஆசுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடதில்
ஆவினன் குடிவாழ்வான தேவர்கள்—பெருமாளே'

என்று சேரமான் பெருமாணயனர் திருக்கைலைபுற்ற சரித்திரம் முழுவதும் பாடிவிட்டனர். எனவே சேரமான் அன்பு செய்த சேரவிநாயகரை வணங்கி மேலும் மலை ஏறுவோம்.

கங்கை நிலவுசடைக் காட்டானைத் தந்தையெனும்
புங்கவெண்கோட் டானைபதம் புந்திவைப்ப தெந்நாளோ.

படியேறும் பாட்டு :—

மலையேறும் புண்ணிய சீலர்கள் வாய் மணக்க உள் மணக்கும் மதுரத் தமிழால் மலைமேலுள்ள மழவனைப் பலப் பல பாடிப் பாடி படியேறுவர். அத்தகு பாடல்கள் மிகப் பல. அவற்றுள் அடியேனை ஈன்ற அன்னையார் பல நாளாகத் தம் இளமையில் பாடக் கேட்டதாகக் கூறும் பழம் பாடல் ஒன்று இப்போது நினைவிற்கு வருகிறது. அது கர்ண பரம்பரையாகக் கேட்கப்பட்டது. அதனைப் பாடினோர் யாவரென்று தெரியவில்லை. சுந்தரியாள் என்ற பேர் வருவதால் அப்பெயருடையார் பாடிய பாடலிலும் சில பல அடிகள் சிதைந்து இருக்கிறது. ஆயினும் கருத்து ஆழமுடையது. இதனை ஈண்டுக் கூறுவதன் நோக்கம் இதனைப் பாடினோர் யாரென்றும், இப் பாடலின் சரியான பாடம் இதுவென்றும் அறிந்தோர் கூறினால் நலமாகும் என்பதே.

இனிப் பாடலைப் பாடிப் படியேறுவோம். பாட்டில் பழநிச் சிறப்பும் பரமன் பெருமையும், பார்கவடி வைபவமும் விளக்கம் செய்யப் பட்டுள்ளதைப் படித்து மகிழுங்கள் :—

“ பாண்டிநகர் மேல்திசையில் பழநிமலை உச்சியிலே
ஆண்டிரூப மாயிருக்கும் அதிசயத்தை ஆரறிவார்?
அறிவார் பெரியோர்கள்; ஆனந்தங் கொண்டிருப்பார்
சிறியோர் அறிவாரோ சிவகுமரன் தன்னருளை !
அருள்நிறைந்த பழநிமலை அடியார்கள் போற்றுமலை
சிவனடியார் கூட்டத்திலே தெரியுதுபார் காவி
குல்லாய்

அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்ட வந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

காவிருல்லாக் காரரிவர் (கந்த) பிரான் அருளைப்
பெற்றார்
மக(வெ)ன்றுஞ் சொல்லுவார்கள் மாந்தர்முதல்
தேவரெல்லாம்
தேவர்க்கதிபதியாம் தேடரிய சிவக் கொழுந்தாம்
பாவவினை யகற்றும் பாலதண்ட பாணி இவர்
தண்டபாணி தன்கழுத்தில் தாழ்வடமும் பூணூலும்
குண்டலங்கள் காதுகளில் குங்குமப்பூ மேனியவர்
மேனியெலாம் வெண்சாம்பல் மென்குறடு பாதாட்சை
ஞானிக்கேற்ற கோவணமும் நல்லரைஞாண் அரை
தனிலே
அரைதனிலே கச்சைகட்டி அழகுசடை தொங்க
விட்டுத்
துரைராஜர் பொட்டுமிட்டு தூக்கிவலக் கால்சாய்ந்து
சாய்ந்தநல்ல பின்துடையில் சரிந்ததண்டாயுத
மொன்(று)
ஊன்றியதோர் கரமுடனே உல்லாச முறுவலுடன்
வாட்டமது போயிருக்கும் வடிவழகை என்ன
சொல்வேன்
சொல்லரிய பழநிமலை சுந்தரியாள் போற்றுமலை
நல்லவையா புரிக்குளமாம் நந்தவனப் பூந்தோட்டம்
பூந்தோட்டஞ் சோலைகளில் புகழ்பெறவே அன்ன
தானம்
வாட்டமது போயிருக்கும் வந்திடும்பால் காவடிகள்
காவடிகள் பெருமைதனை கண்டுமகிழ்ந் தாண்டவரும்
ஆனந்தங் கொண்டிருப்பார் அவர்பெருமை ஆரறி
வார் ?

குறிப்பு :—அடைப்புக்குறி () யிட்டவை அடியேன் கிரப்பியவை.

(தொடரும்)

கல்லேன் மலரேன் கனிந்த அன்பே பூசைஎன்ற
நல்லோர்போல் ஏழையேனையும் நாடுவரோ பைங்கிளியே.

ஒரு கவி

(V. R. G.)

இவ்வுலகமானது சர்வவல்லமையுள்ள கடவுளாகிய திரு முருகனின் திருவருளால் உண்டாகி, அவரருளால் இயங்குகிறது. அவரே முத் தொழிலுக்கும் மூலகர்த்தா வானவர். இதுதான் நம் கண் முன் தோன்றும் உலக நாடகத்தின் உண்மை.

இந்த உண்மையை நாம் உணர்வதற்கு திருவருள் நிறைந்த பேரறிவு வேண்டும். அறிவாலறியக் கூடியது. புலன்களுக்கு எட்டாதது. இதையே நம் அருணகிரியார்

" அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே !"

என அருளியுள்ளார்.

அவ்வறிவால் உண்மையை அறியவொட்டாது நம் மைத் தடுப்பது யாதெனின், நம் ஜனன முதல்கொண்டு நம் முன் குடிகொண்டு வளரும் நான், எனது, எனும் மாயையாகிய - பர்வதம் ! இதையும் நாம் சந்தேகமற உணர்தல் பொருட்டு,

" யான்று னெனுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன்றி
யாவருக்குந் தோன்றது சத்தியம்,"

என கந்தரலங்காரத்தில் அருளி யிருக்கிறார்.

அந்த நான் எனும் எண்ணமே, நம்மையும், உண்மைப் பொருளாகிய திருமுருகனையும், வெவ்வேறாகப் பிரித்து நாம் அந்த உண்மையை உணரவொட்டாது தடுக்

காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தா லென்ன அருள்
வேந்தன் எமை இழுத்து மேவுவனே பைங்கிளியே.

கும் மாயா பர்வதமாகிறது. அந்த பர்வதத்தை தன் இருப்பிடமாகக் கொண்டு சஞ்சரிக்கும் மிருகங்கள் அநேகம் உண்டு! அவைகளில் மமதை என்னும் யானையும், பிடிவாதமெனும் கரடியும், ஆங்காரமெனும் வேங்கையும் மிக முக்கியமானவை! இவைகள் அடிக்கடி நமக்கும் பிறருக்கும் துன்பத்தை விளைவிக்கக் கூடியவை! அவைகளால் ஏற்படும் துன்பம் யாது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

மிக உன்னதமானதும், திருக்குமரனால் அளிக்கப் பட்டதுமான இம் மனித ஜன்மம், கடவுளின் படைப்புகள் யாவற்றினும் சிறந்தது. அவர் நமக்கு கொடுத்திருக்கும் அறிவு என்னும் பொக்கிஷமானது மிகவும் சக்தி வாய்ந்தது. சகல கல்விகளையும், சகல சாஸ்திரங்களையும், சகல வித்தைகளையும் எவ்வித தடையுமின்றி தானே உணர்ந்து கொள்ளக் கூடியது. வற்றாத சமுத்திரமாய் நமக்கு உற்ற துணையாய் உதவி வருவது!

இவ்வளவு மகிமை வாய்ந்த அறிவைப் படைத்த மனிதனுக்கு மமதை யென்னும் யான் அவன் உள்ளத்தில் புகுந்துவிடின், அவன் அறிவின் வளர்ச்சி அன்றிலிருந்து குறைய ஆரம்பித்துவிடும். மமதை வளர வளர - அறிவு குறைந்துகொண்டே போகும்! நன்மை தீமை யாதென அறியாதவனாவான்! மமதை வந்தால் கண்ணை மறைத்து விடும் எனச் சொல்வதுண்டு. மமதையெனும் யானையின் வசமானவன் தன் அறிவெனும் பொக்கிஷத்தைப் பறி கொடுத்ததுமன்றி, தனக்கும் பிறர்க்கும் தீமைக்குக் காரணமாவான்.

சொல்லிறந்து நின்ற சுகருபப் பெம்மானை
அல்லும் பகலும் அணைவேனோ பைங்கிளியே.

மமதை முதிர்ச்சியால் உண்டான பிடிவாதம் எனும் கரடியானது இன்னும் பல இன்னல்களை உண்டாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும்!

பிடிவாத முதிர்ச்சியால் ஜெனிக்கும்-கோபம் - ஆங்காரமெனும் வேங்கைப் புலியானது மிகவும் மூர்க்கம் நிறைந்தது! வேங்கையில் அநேக வகைகள் இருப்பது போல ஆங்காரத்தில் பல வகைகள் உண்டு! அவைகளால் உண்டாகும் கொடுமையோ கணக்கிலடங்கா!

இந்த மூன்று மிருகங்களும் ஏககாலத்தில் ஒரு மனிதனிடம் சஞ்சரிக்குமேல் அவன் பாடு அதோகதிதான். உன்னதமான பிறவியின் பயனை இழந்தவனாகிறான். இகத்திலேயே நிம்மதியற்ற நரக வாழ்க்கை யடைந்து துன்புறுகிறான்!

இவர்கள் படும் துன்பத்தைக் கண்டு சகியாத கருணை வள்ளல் நம் அருணகிரியார், இந்த துஷ்ட மிருகங்களால் ஏற்படும் உபாதைகளும் மாயா பர்வதத்தில் வீசி அடிக்கும் ஆசைபெனும் விஷக் காற்றால் அடிக்கடி ஏற்படும் துஷ்ட நோயும் நீங்கி சுகமுறுவதற்காக கந்தரலங்கார மென்னும் ஞான நூலை அருளி யிருக்கிறார்! அது நூறு செய்யுள்கள் கொண்டது. அதில் ஒரு கவியையேனும் கற்றறிந்து தினம் துதிப்போர், இத்துன்பங்களி னின்று நீங்கி சுகம் பெருவாரென உறுதி கூறி யிருக்கிறார்.

"துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தனன்னூல்
அலங்கார நூற்றுள் ஒரு கவி தான் கற்றறிந்தவரே!"
(கந்தரலங்காரம்)

தூங்கிவிழித் தென்னபலன் தூங்காமல் தூங்கிநிற்கும்
பாங்கு கண்டால் அன்றோ பலன்காண் பேன் பைங்கிளியே.

முதலில் யானையும், அதன் பிறகு கரடியும், அதன் பின் புலியும் உண்டாகி யிருக்கையில் அவர் ஏன் முதலில் புலியையும் பின்பு கரடியையும் அதன் பின் யானையையும் சொன்னாரென்பதை நாம் சற்று யோசித்துப் பார்த்தால் அதன் முக்கியம் நமக்கு நன்கு விளங்கும். முதலில் மிகவும் தீமை விளைவிக்கும் மிருகமாகிய புலியையும், பிறகு அதற்கடுத்ததா யுள்ள கரடியையும், கடைசியில் ஆதிகாரண மான மமதை யெனும் யானையையும் அழிக்க வேண்டி, வரிசைக் கிரமமாய் சொல்லியுள்ள கருத்தின் மகிமை நம் சிற்றறிவுக்கும் நன்கு புலனாகி ஆனந்தத்தைக் கொடுக்கிறது!

ஆகையால், மனமே! இனி கணப்பொழுதும் போக்காது, அருள் கவசமாகிய கந்தரலங்கார பாராயணம் செய்து, சகல இன்னல்களும் நீங்கி இக பர சௌபாக்கியத்தை அடைவாய்!

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் - மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)

16-வது கர்த்தா, சக்ரவாஹத்தில் ஜன்யம்

ராகம் : ரஸாளி.

தாளம் : ஆதி. ஒருகளைச்சவுக்கம்.

சம இடத்தில் ஆரம்பம்.

உபாங்க ராகம் : ஷாடவ, ஔடவ, சமக, வரிக, ரக்தி, ராகம் சுத்த ரிஷப, ஸுத்த மத்தியம

---

* தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லையிலா இன்பமயம் எய்துவனே பைங்கிளியே.

சதுஸ்ருதி தைவத ஸ்வரங்கள் ராகச் சாயையை நன்கு உணர்த்தும் பாவச் சுரங்கள்.

ஆரோஹணம்: ஸ ரி ம ப த நி ஸ
அவரோஹணம்: ஸ் த ப ம ரி ஸ

இந்த ராகத்தின் பாவ உணர்ச்சியானது, ஒருவன் தான் அஞ்ஞானத்தினால் செய்த தவறுகளை சிறிது மெய்ஞ் ஞானம் ஏற்பட்ட காலை அத் தவறுகளை யெல்லாம் உணர்ந்து, இறைவனே! நான் அறியாமல் செய்த தவறு களை யெல்லாம் மன்னித்து, என்னைக் காப்பாற்றி யருள வேணும் ஐயனே என்று, மிகவும் நொந்த உள்ளத்தவனாய் முறையிட்டுக் கொள்ளும் தத்துவத்தை யுடையது.

மற்றும், எல்லா உலகங்களையும், அதனதன் தன்மை நிலைமைகளுக்கு ஒத்தவாறு ரக்ஷித்தருளும் ஸர்வ தயாபர னாகிய நீ, என்னொருவனை மட்டும் புறக்கணித்தல் நீதி யாகுமோ ஐயா என்று, உரிமையின் காரணமாக வற் புறுத்தி, என்னை எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டும் ஐயனே என்று அறிவுறுத்தி கேட்டுக்கொள்ளும் பண் புடையதாகும். இதனை உணர்த்த வேண்டியே, இந்த ராகத்தில் சதுஸ்ருதிதைவதம் ராக மூர்ச்சனா ஸ்வரமாக இருப்பதைக் காணலாம்.

பல்லவி

அபராதமுல நோர்வ ஸமயமு
க்ருபஜூடுமு கனமை கா—அ

நன்னெஞ்சத் தன்பரெல்லாம் நாதரைச்சேர்ந் தின்பனைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான் வாழ்விழந்தேன் பைங்கிளியே.

அனுபல்லவி

3 3
சபலசித்துடை மனசெறுக்கனே
3 3
ஜாலிபெட்டு கொகி மொரலனிடின நா—அ

சரணம்

3
ஸகல லோகுல பலமுல நெறிகி
3 3
ஸம் ரக்ஷிம்சு துண்டகக்
3 3
னொகனி ப்ரோவ தெலிபதா கீர்த்தன
3
ஸதகமொ னர்ச்சின த்யாக ராஜனுத—அ

கருத்துறை விளக்கம்

கநமைந நா அபராதமுல நோர்வ ஸமயமு :— மிகவும் பெரியதான என்னுடைய தவறுகளை மன்னித்துப் பொறுத்துக் கொண்டு என்னைக் காப்பாற்றி யருள இது தான் ஸமயமையா; **க்ருபஜூடுமு:**—கருணைபுரிய வேண்டு மைய்யா **சபல சித்துடைமநஸெறுககனே :—** ஆசாபாசங்களில் மனம் சென்றவனாய், எப்பொழுது பார்த்தாலும் சஞ்சல முடைய உள்ளத்தவனாய், உன்னுடைய பெருங் கருணை யான உள்ளத்தின் அருமை தெரியாதவனாய்; **ஜாலிபெட்டு கோனி:**-உன்னுடைய இந்த உலகை யெல்லாம் ரக்ஷித்தருளும் பெருங் கருணையின் மாண்பு தெரியாமல், எனக்கு நானே என்னுடைய உள்ளத்தில் விசனத்தை உண்டுபண்ணிக் கொண்டு என்னுடைய காலத்தை யெல்லாம் வீணாக்கி விட்டேன்;

நீர்க்குமிழி போன்றவுடல் நிற்கையிலே சாசுவதஞ்
சேர்க்க அறியாமல் திகைப்பேனோ பைங்கிளியே.

மொரல நிடின நா அபராதமுல நோர்வ ஸமயமு :— ஆனால் இப்போது உனது கருணையின் எல்லையை உணர்ந்தேன்; உணர்ந்ததுமன்னியில் உன்னுடைய திருவடியில் வந்து தஞ்சமடைந்து, என்னுடைய அஞ்ஞானத்தினால் அடைந்த துன்பங்களை யெல்லாம் சொல்லி முறையிட்டுக் கொள்கிறேன் ஆதலால், என்னுடைய தவறுகளை யெல்லாம் மன்னித்துக் காப்பாற்றி யருள இதுவே சமயம் ஐயா.

மற்றும் **ஸகல லோகுல பலமுலதெறிகி**:—எல்லா உலகங்களிலும் உள்ள ஸர்வ ஜீவராசிகளின் நன்மை தீமைகளுக்கு ஒப்ப, அவைகளை நன்கு தெரிந்து; **ஸம் ரக்ஷிஞ்சுசு நுண்டக** :— அவைகளை யெல்லாம் காத்து ரக்ஷித்தருளும் கருணை மூர்த்தியாகிய நீ இருக்கும் போது; நம் னொகனி பிரோவ தெலியதா :— என் ஒருவனை மாத்திரம் காத்து ரக்ஷித்தருள உனக்குத் தெரியாமல் போய் விட்டதா என்ன **கீர்த்தன ஸதக முலு ஒநர்ச்சன த்யாகராஜநுத** : — இது வரையும் உனது மஹிமையையும், உனது பெருங் கருணையினால் ஏற்பட்ட புகழையும், நூறு கீர்த்தனங்களால் துதித்து வழிப்பட்டுள்ள இந்த த்யாகராஜனால் கொண்டாடப்படுகிற ராமா என்று த்யாக ப்ரும்மம், இறைவனாகிய ராமன் மீது பராமுகமாக உள்ள மன நிலைமையைச் சிந்து இடித்துப் பேசி; தன்னுடைய விசனக் குறிப்பு தோன்ற, நியாய நியாயங்கள் எடுத்துச் சொல்லி முறையிட்டுக் கேட்டுக்கொள்கிறார், சரணடைந்து விசனமுற்ற உள்ளத்தோடு

கருத்துள்ளுறை

மக்கள் பண்பானது தவறுகளுக்குடரியதே ஆயினும், வினைப்பயன் வாயிலாகவோ, பெரியோர்களின் சாங்கத்தின் வாயிலாகவோ, அல்லது இறைவனின் பெருங்

மெய்யிலேநோய் மாற்றவும்நம் மெத்த உண்டெம் அண்ணலேந்த
மையல்நோய் தீர்க்க மருந்தும்உண்டோ பைங்கிளியே.

கருணை விசேஷத்தாலேயோ, தங்களுடைய தவறுகளை ஒரு காலத்து உணர்ந்து இறைவனிடத்தில் மன்னிப்புக் கோரி,முறையிட்டுக் கொண்டு சரணடைவார்களே யானல், அந்த சந்தர்ப்பத்தையே பயன்படுத்திக் கொண்டு, இறைவனின் தாயினும் மேலாம் தன் கருணை இவனை மன்னித்துக் காப்பாற்றி யருளும் என்று போதித்தார். ஆதலால், நீங்கள் தெரியாமலோ, தெரிந்தோ ஏதோ தவறுகள் செய்திருந்த போதிலும், ஒரு காலத்தாவது உணர்ந்து இறைவனிடம் சென்று மன்னிப்பு கோருவீர்களேயானல், அவன் நிச்சயமாக உங்களை மன்னித்துக் காப்பாற்றி யருளுவன் என்னும் தத்துவத்தைப் போதித்து வழிபடச் சொல்லுகிறார் த்யாகப்ரும்மம்.

இக் கருத்தை இந்த ராகத்தில் இணைத்துள்ளதின் தத்துவம் மக்களினமானது, அவர்களின் அஞ்ஞான நிலைமைக்குத் தக்கவாறு தவறுகள் இழைத்த போதிலும், அறிவு வந்தற்றபின் தவறுகளையே எண்ணிக் கொண்டிராமல், இறைவனின் திருவடிகளில் விழுந்து மன்றாடி வேண்டிக் கொண்டால், மன்னித்து ரக்ஷித்தருளும் பெருங் கருணை மூர்த்தியின் திறம் தெரியாமல், இப்படி யெல்லாம் தவறையே எண்ணிக்கொண்டு பாழ்படுகிறார்களே என்பதனை உணர்ந்து, அவர்களைப் பார்த்து மிகவும் விசனமுற்ற உள்ளத்தவராய், அவர்களை அழைத்துத் தன்னுடைய அன்பு உள்ள மாக்ஷி தொனிக்க, இயல், இசை, பாவ, உணர்ச்சி தோன்ற இந்த பாவக் குரலில் (அதாவது இந்த ஸஹானா ராகத்தில்) இணைத்துள்ளார்.

உள்ளத்தி னுள்ளே ஒளித்திருந் தென் கள்ளமெல்லாம்
வெள்ளல் அறிந் தால்எனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே.

ஸம இடம், ஆதிதாளம், ஒருகளைச் சவுக்கம் ஆகிய, இட, தாள, பேசுங்கால இலக்கண மாண்பு மிகவும் தன்னுடைய குண அழகிலும், சொல்லும்போது அவசர மில்லாமலும், மிகவும் நிதானமாகச் சொல்லாமலும், கடு நிலைமையான, புரிந்துகொள்ளுவதற்கு மிகவும் யுக்தமான, மத்யம கால வோட்ட நடையில் போதித்து, இசைக் கலை யின் சிறப்பு பொருந்த, இட, தாள, கால, இலக்கணங்கள் ஒன்ற உபதேசித்துள்ளார் த்யாக ப்ரும்மம்.

இதனில், அவருடைய இயற்கை வழக்கப்படி, எல்லா உலக உயிரினங்களும் முறையிட்டுக் கொள்ளுமே யானல், அவ்வுயிர்களின் தவறை மன்னித்து, அவர்களையும் பாவன முறச் செய்துவிடுகிறது உனது பெருங்கருணை. என் ஒருவனை மட்டும் ரக்ஷிக்கத் தயங்குவது ந்யாயமா ஐயா என்று, தன்னை மிகவும் சிறியவனுக்கும் சிறியவனுய் தாழ்த்திக்கொண்டு, விநயமாக நமக்கெல்லோருக்கும் உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம்.

ஆத்ம போதம்

(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன், மாடுங்கா)

63-ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு ஏக்கமுற்றிருந்த போது, இதுவரை புஷ்பங் களின் தேனைக் குடிப்பதிலேயே தன்னை மறந்திருந்து, மெது வான காற்று பட்டதால் தன் சுய உணர்வு பெற்று ரீங்கார மிட்டுப் பறந்த வண்டுக் கூட்டங்களின் காட்சியானது, என் வருத்தம் சகியாது எனக்கு ஆறுதல் கூறி, என் இத் அன்ப

ஆகத்தை நீக்குமுன்னே ஆவித் துணைவரை நான்
தாகத்தின் வண்ணந் தழுவுவனே பைங்கிளியே-

விலக்குக் காரண புருஷனிடமும் என் செய்தியைக் கூறச் செல்லுபவைபோ லிருந்தது. சற்று நேரம் கண்கள் மூடிக் கொண்டன. துக்க மிகுதியால் மனம் சலனமற்றிருந்தது. தாரை தாரையாக பாஷ்பம் பெருகிற்று. பக்தியான திரியிட்டு எவனைத் தேடித் தேம்பித் தேம்பி புலம்புகின்றேனோ, அவன் கருணையான என்னை விட்டு, என்றைக்காவது என்னாசை நிறைவேறும் என்ற திடநம்பிக்கையான விளக்கு ஏற்றி, உறுதி, தைரியம் முதலிய பாதுகாப்புகளால், கஷ்டங்கள், சோர்வாகிய புயலி லிருந்து அருமையாக காப்பாற்றி வரப்பட்ட என்மனமான தீபம் இன்று அய்யனின் பரா முகத்தினால் என் வசத்திற்கும் மீறி அணைந்துவிடுமோ என்ற திகில் ஏற்பட்டது. மனதை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். உடைந்த கரையைச் சரிப்படுத்த மீண்டும் நம்பிக்கை என்னும் அணையை வெகு வேகமாகக் கட்டத் தொடங்கினேன். யாவும் பயனற்றுப் போயின. மனக் குதிரை உணர்ச்சிகளாகிய புழுதியை ஏராளமாகக் கிளப்பிக்கொண்டு தான் போக வேண்டிய திசையில் வெகு வேகமாகப் போக ஆரம்பித்தது.

“கருணாப்தே! இந்த ஏழையின் விஷயத்தில் மட்டும் உன் இந்தப் பட்டம்”. பொய்யாகிவிட்டதோ! அல்லது, நீ உண்மையிலேயே கருணையற்றவன்தானோ! அவ்வாறானால், ‘ஸத்யவாக்’ என்று புகழ்பெறும் வேதஸ்ம்ருத்யாதி உபநிஷத்துக்கள்தான் பொய்யுரைக்கின்றனவோ! நமக்குத்தான் கோடானு கோடிப் பொன் கொண்டுவந்து அழகிய கோயில் நிர்மாணிப்பவர்களும், ஆயிரமாயிரமாக செலவழித்து பூஜாதிகள் செய்பவர்களும், குயிலினு மினிய ஸுஸ்வரமான குரலில் ஸ்துதிக்கும் பக்தர்களும் இருக்கையில், இவன் யார் என்று என்னிடம் பேச வெட்கப் படுகிறாயோ! இல்லை, என் முன் ஜென்ம இஹஜன்ம பாபங்களின் குவியல்தான், உன்போல் காருண்ய மூர்த்தியையும் பொய்யனாக்கி உன்னை என் அருகே வரவொட்டாமல் தடுக்கிறது போலும்! எத்தனையோ ஜன்மங்

கன்னித் தலைவரவர் கைகாட்டிப் பேசாமல்
· உள்ளத்தில் வந்த உபாய மென்னோ பைங்கிளியே.

களாகப் புதையலாகச் சேகரித்து வைத்திருக்கும் பாபச் சுமையைக் கண்டு நீயே பயப்படுகிறாய் போலும்!

உனக்குப் பயமா! தேவர்களும் மூவர்களும் கதிகலங்கிக் கதற, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அமுதமெனப் பானம் செய்யப்பட்ட நஞ்சுடைய கண்டனுக்கு இந்த அற்பனிடம் பயமா! கோடானு கோடி தேவரும், மால் அயன் முதலானோரும், நான்முந்தி, நான்முந்தி என உதவிக்கு வர, தன் புன்சிரிப்பு ஒன்றாலேயே த்ரிபுரங்களையும் ஸம்ஹாரம் செய்த த்ரிபுராந்தக ருத்ரமூர்த்தியாகிய உனக்கு, இவ்வேழையினிடம் பயமா! உம்மிடம் அடைக்கலம் புகுந்த பதினாறு வயதுப் பாலகனைக் காப்பாற்ற காலனைக் காலாலுதைத்த காலஸம்ஹார மூர்த்தியாகிய ம்ருத்யுஞ்ஜய மூர்த்திக்கு, அன்றே பிறந்து அன்றே நசித்து அல்லல்பட்டு வாழும் இப்பாபப் பிண்டத்தினிடம் பயமா! என்னே என் மடமை!

பின் ஏன் இந்தப் பராமுகம்? தக்ஷன் சாபத்தால் தன் கலைகள் ஒவ்வொன்றாய்த் தேய்ந்துவர, அபயமென ஓடோடி வந்த திங்களைத் தன் முடிமீது சூடி கலங்காது காப்பாற்றினாய். தேவரும், சாதுக்களும், சூரபத்மன் கொடுமை சகிக்கமாட்டாமல் நிலைகுலைந்து கதிகலங்கி ஓடோடியும் வந்து ஓவென்று முறை இட்டபோது, குறுநகையுடன் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்கள் துயர்தீர ஸ்கந்தனை அவர்களுக்கு அருளினாய். கருணாஸாகரன், தயாநிதி, என்று வேதாதி சாஸ்திரங்கள் எல்லாம் புகழ்ந்து, என் விஷயத்தில் மட்டும் ஏன் கல்நெஞ்சனானாய்? ஆம், உன் புகழ் பாடும் வகையறியேன். வேதமோ, அதன் உட்பொருளோ அறிந்திலேன். மலர்கள் கொண்டுவந்து ஆடம்பரமான வகையில் தீபாலங்காரங்கள் எல்லாம் செய்து அர்ச்சிக்கவும் வக்கில்லேன் ஆனேன். அப்பா, அந்த சக்தியையும் அருளுபவன் நீதானே! அஷ்டைச்வரங்களுக்கு, சங்கநிதி பதுமநிதி இருக்கும் நீர் சூழ்ந்த இப்பாருக்கும் மற்றெல்லா அண்டங்களுக்கும், இந்த உன் அடிமைக்கும் நீயே

சிந்தித்த எல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே.

தனி எஜமானனாக வெற்றிக்கொடி நாட்டியுள்ள போது, பேதையன் உனக்கென்று எந்தப் பொருளைக் காணிக்கையாக ஸமர்ப்பிப்பேன்? என் ஹ்ருதயமாகிய தாமரை மலரை உன் பொன்னடிகளில் பக்தியுடன் ஸமர்ப்பித்துள்ளேன். அதை ஏற்று, நான் அடிமை, நீ எஜமான்; நான் உன் வத்ஸலன், நீயே என் தாயும், தந்தையும்; நான் உன்னையே சார்ந்து, உன்னிடமே அடைக்கலம் புகுந்தவன், உன்னை யன்றி வேறொரு தெய்வம் அறியாதவன் என்ற ஒரு உறவை உத்தேசித்தாவது, என்னிடம் இரக்கம் காண்பிக்கலாகாதா!

எப்பொழுதாவது, வேடிக்கையாக, இன்று மகா பாபிகளின் சிகர ஒருவனுக்கு அனுக்ரஹம் பண்ணவேண்டும் என திருவுள்ளம் கொள்வாயேல், அதற்கு நானே தேர்ந்தெடுக்க உகந்தவன்! அஞ்ஞானமே உருக்கொண்டு, ஆணவமே வடிவெடுத்த என்னைக் காப்பாற்றி அருள் பாலிப்பதின் மூலம் நீ தீனதயாளன், பாபக்னன் என்னும் உன் பெயர்களையே இன்னும் உறுதிபடுத்திக் கொள்கிறாய். பேதையின் கதற லெல்லாம் உன் காதில் விழவில்லையோ? அல்லது, என்போன்ற இரக்கமற்ற கல் நெஞ்சர்களைப் பார்த்து உன் மனமும் கல்லாகி விட்டதோ? சீ, உன் கல்லுள்ளம் இத்தகையது என எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால், நான் இத்தனை காலம் உன் வரவை எதிர் பார்த்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காத்திருக்கவே மாட்டேனே. என்றைக்காவது உன்னை அவசியம் காணலாம் என்ற திடநம்பிக்கையல்லவா என்னையும் காப்பாற்றி, மனதிற்கும் இதுகாறும் ஆறுதலைத் தந்து வந்தது. இது தான் அதன் பரிதாபகரமான முடிவோ?

என் அம்மா! தாயடித்தால் தந்தை யணைப்பான். தந்தை யடித்தால் தாயணைப்பாள். இங்கெனக்குத் தகை மிக்க தந்தையும், கருணை பொருந்திய தாயும் நீயேயன்றோ! உலகில் கெட்ட புத்ரர்கள் எத்தனையோபேரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் மாதாவும் மைந்தனிடம் அன்பற்றாள் என எங்கேனும்

---

* வினையோன்று மின்றி நன்றிய லொன்றி நின்பதம்
வினைவென்று அன்புதந்து அருள்வாயே

கேட்டிருக்கிறோமா! மாதாவின் அத்தகைய அன்பும் என் விஷயத்தில் பொய்த்துவிட்டதே.

இவ்வித உணர்ச்சிகளின் த்வந்த்வத்தில் எவ்வளவு காலம் சென்றிருக்கும் என்பது எனக்கே தெரியாது. திடீரென்று இன்னதென்று விவரிக்க இயலாத ஸ்பர்ச உணர்ச்சியால் திடுக்கிட்டுக் கண் விழித்தேன்! ஆ! என்னென்று சொல்வேன் அந்தக் காட்சியை! எவ்விதம் புகலுவேன் பேதையின் பாக்யத்தை! மனோ, வாக்கு, காயங்களாதி பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாததும், கற்பனைக்குப் புறம்பானதுமான திவ்ய மங்கள ஜோதிஸ்வருபம் ஒன்றை, முன்னே நிற்கக் கண்டேன். ஒரே சமயத்தில் சதகோடி பால சூரியர்களின் பிரகாசத்தால் ஒரு மிக்கத் திரண்ட வனப்போ என பிரமிக்கும்படி விவரிக்க முடியாத அழகின் கிரணங்கள், அவ்வுருவத்தி லிருந்து சிதறி சுற்று வட்டாரத்தை அழகுறச் செய்துகொண் டிருந்தன. நீலப்பட்டாலாய அம்பரத்தை உடுத்திக்கொண்டு, பொன் போன்ற மேனியளாய், ஒரு திவ்ய ஸ்திரீ ரத்னம் முன்னே நின்று கொண்டிருந்தாள். (தொடரும்)

சேக்கிழார் செய்தது

இளவழகனார்

(116-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்தாட் கொண்ட புராணத்தில், கடைசி வரையில் நம்பிகள் வலியுறுத்து வாதித்த உண்மை, 'ஆளாய் அந்தணர் செய்தல் என்ன முறை' என்பது. வேதியராய் வந்த இறைவன் வலியுறுத்து வாதித்த உண்மை, 'இம் முறை இசைவினால் அமைந்தது; இது நின் தந்தை தன் தந்தை நேர்ந்தது' என்பது.

எத்திக்கும் தானாகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேவே பராபரமே.

இரண்டு சிறந்த உண்மைகளை இங்கே நாம் உருவி அறிதல் வேண்டும். நம்பிகள் அவ்வளவு வலியுறுத்தி உணர்ச்சி மிகுத்ததனால், இறைவனுக்கு அடிமையா யிருத்தலின் ஆர்வம் இனிது வெளிப்படுகின்றது. வேதியர் அவ்வளவு வலியுறுத்து வழக்காடியதனால், அன்பினால் இறைவனடியார்களுக்கும் அடிமையா யிருத்தலின் மேன்மை நன்கு பெறப்படுகின்றது.

தடுத்தாட் கொண்ட புராணத்தின் மறைபொருள், இறைவற்கு அடியராயிருக்கும் நம்பியாரூரரை அடியார்க்கும் அடியராக்கும் அழகுதான்! திருவாரூர்க்கு அவர் செல்ல நேர்ந்ததும், சென்று பரவையாருடன் திருமணங் கூடி வாழ நேர்ந்தது மெல்லாம் அடியார்க்கு அடியராகும் மாட்சி தலைப்பட்டுத் தென்றமிழ்ப் பயனாகிய திருத் தொண்டத் தொகையை அருளிச் செய்தலேயாய் முடிந்தமை. அடியார் யார்?

இறைவன் இன்னான் எனத் துணிந்து அவற்கு அடிமையாதலோடு அவனடியார்க்கும் அடிமையாம் சிறப்புடையது இத் தென்னாடு! இறைவற்கு அடிமையாதலைத் 'திருநெறி' என்று பாராட்டினால், அடியார்க்கு அடிமையாதலைப் 'பெருநெறி' என்று போற்றிக் கொண்டது இந்நாடு!

நம்பியாரூரர் தென்னாட்டுக்கு வந்து இருந்து பழக நேர்ந்தது இதனாலேதான். வேதியர் கொண்டுவந்த ஆளோலையை ஆவண வீதியில் ஆரூரர் கிழித்தெறிந்த போது, அவ் வேதியர் முறையிட்டார். அருகிலிருந்தவர்கள் அப்பெருமானை நோக்கி அவர் கருத்தைப் 'பெருமுறை' என்று தம்மை மறந்து போற்றியதும் இதனாலேதான்!

வாக்காய் மனதாய் மனவாக் கிறந்தவர்பால்
தாக்காதே தாக்குந் தனியே பராபரமே.

"ஒருமுறை முறையோ என்ன
உழைநின்றார் விலக்கி, "இந்தப்
பெருமுறை உலகில் இல்லா
நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவரே!"

என்னும் சேக்கிழார் தெய்வ மொழிகளால், இவ்வுண்மைகள் இனிது விளங்குகின்றன.

இறைவனுக்கு அடிமையாதல் பொது! அடியவர்க்கு அடிமையாதல் சிறப்பு! இறைவனுக்கு அடிமை யென்பது வெளிப்படை; ஆனால் அடியவர்க்கு அடிமை என்பது அன்பின் சம்மதத்தால் அமைவது!

இன்ன அடியவரோடு இன்னார் இணங்கித் தொண்டு பூண்டு ஒழுகுகின்றார் என்ற வரன் முறையும் நாட்டில் அங்கங்கும் உண்டு. திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகள் அன்பின் நேர்வால் அடியராய விளங்கியதும், திருஞான சம்பந்தர்க்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அடியாராய்த் தொடர்ந்திருந்து தொண்டு பூண்டதும், மெய்கண்ட சிவத்துக்கு அருணந்திசிவம் உள்ளத் திணக்கத்துடன் உழைநின்று திருநெறித் தொண்டரானதும் உமாபதி சிவனார்க்குப் பெற்றான் சாம்பன் திருவடித் தொண்டு கண்டதும் போல் அவரவர் அகமார்ந்த சம்மதத்துடன் நிகழ்ந்தவை யென்பதை இங்கு நினைவு கூறலாம்.

அன்பின் சம்மதத்தால் இங்ஙனம் நிகழ்த்தலை மூதிய வேதியராய் வந்த அண்ணல் வலியுறுத்து விளக்கி வழக்காடினார். திருவெண்ணெய் நல்லூர் அந்தணர்கள் 'மறையவர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லையே' என்று கேட்டபோது, 'அது இசைவினால் நேர்ந்தது' என்னும் கருத்துத் தோன்ற,

---

அன்பைப்பெருக்கி என ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

"வந்தவர் நிசைவே யன்றோ
வழக்கு இவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்தது"

என்றனன் தனியாய் நின்றான்; இவ்வாறு கூறுவதி லிருந்து இது தெரிகின்றது.

அந்தணர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லை என்பது பொது வழக்கு! காரணம் முனிவரா யிருப்போர் பொதுவாக மக்களுக்கு அடிமையல்லர், இறைவற்கு அடியராவர் என்பதற்காக அமைந்தது அது; அது பொருத்தமே!

ஆனால், மக்களில் அரனடியராய் விளங்குவோர்க்கும் அந்தணர் அடிமையாகார் என்பதை அவ் வழக்குக் காட்டாது: அடியார், அடியார்க்கு அடியராதல் இந்நாட்டின் சிறப்பு வழக்கமே!

சாதியந்தணர் வேறோர் சாதியந்தணர்க்கும் அடிமை யாதல் இல்லையென்பது பொது வழக்கமே யாயினும், அருளந்தன் அப்பூதியடிகள் என்னும் சாதியந்தணர், சாதியந்தணர் அல்லாத அருளந்தண் வேளான் அப்பருக்கு அடியராம் சிறப்பு வழக்கத்தைச் சிறப்பின் உடையது இந்த நாடு!

அப்படியிருக்கும்போது, அருளந்தணர்க்கு அருளந்தணர் அடிமையாதலில் இழுக்கற்ற சிறப்பே உள்ளது என்பதோடு, அன்பின் இசைவும் மற்றுமோர் ஆதாரவாய் உள்ளது என்றால், அவ்வழக்கின் வெற்றிக்குக் கேட்பானேன்!

"அருமறை நாவல் ஆதி
சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்

---

* ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே.

வருமுறை மரபு னோரும்
வருத்தொண்டு செய்தற்கு ஒலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கு இவை என் எழுத்து"

என்னும் ஆளோலைத் திருவாக்கில் அன்பின் இசைவு எவ்வளவு அழுத்தமாய்த் தெரிகின்றது! 'பெருமுனி பித்தன் என்று சேக்கிழார் இடமறிந்து பெய்த தெய்வச் செஞ்சொல்லால், நம்பியாரூர் இப்போது அடிமையாகப் போவது வெறுஞ் சாதியந்தணர்க்கன்று, முனிவராகிய அருளந்தணருக்கே என்னும் தடையற்ற சிறப்பு வழக்கமும் எவ்வளவு பொருத்தமாய்த் தெளிவாகின்றது!

வெற்றி வேதியருடையதாயிற்றே! அனைவரும் வெற்று உலகியலை மறந்து திருவருள் துறையே புகுந்தனர்!

வடபழநி ஆண்டவர் வெண்பா

சென்னை கோடைநகர் என்னும்
சாலிக்கிராமம் வடபழனியாண்டவர்
பாமாலை
(துரைசாமிப் பிள்ளை — திருவொற்றியூர்)

வெண்பா

சாலிக் கிராம சரவணன் றன்னடிக்கே
பாலிக்கும் பாமாலை பண்புறவே—ஆலிக்குஞ்
செஞ்சாலி வளம்மருவு சேண்கோடை நகர்தன்னிற்
குஞ்சரன் பொற்றுணைக் காப்பு

சீர்வளருங் கோடைநகர்த் திகழ்கின்ற மெய்ச்சுடரே
கார்வளருஞ் சாலிகிராம மெய்ஞ்ஞான வொளியே
தார்வளருந் தோளா தயைமிகுந்த சற்குணனே
வார்கொண்ட வள்ளி மணவாள தேவே

சித்த நினைவுஞ் செயுஞ்செயலும் நீயெனவாழ்
உத்தமர்கட் கானஉறவே பராபரமே.

முத்திக்குவித்தே முழுதுணர்ந்தோர் பெருநட்பே
எத்திக்கும் புகழ்கொண்ட வேலுமயில் வாகனனே
தித்திக்கு மெய்க்கரும்பே திருத்தணிகைப் பெருமானே
வித்தைக்குக் குருவான வடபழனியாண்டவனே 2

அருள்பெருகு மரசே யன்பர்தங் கோவே
இருளார்ந்த நெஞ்சா லிடியுண்ட வேழைதனைத்
தெருளார்ந்த மெய்ஞ்ஞானச் செல்வத் திருவொளியே
மருளார்க்கு மாமருந்தாம் வடபழனியாண்டவனே 3

அல்வைத்த நெஞ்சா லலைகின்ற வடியார்க்குச்
சொல்வைத்த உண்மைத் துணையான தெய்வமே
வில்வைத்த தொடையணிந்த தோளா நிலைஉலகிற்
செல்வத் திருவடியைச் சிக்கெனப் பெற்றிலனே 4

Breathe and Build

To breathe is to live and where there is no breath there is no life. The air we breathe in is full of life. The life essence is drawn from the air we breathe in. Thus air is full of life and the great void of the atmosphere round the earth is equally full of life. The body man owns is built of this life-ocean around him. When the body ceases to breathe from the ocean of life around, man is said to be dead. Thus man breathes and builds his body – his life.

But the body is not all that a man is. He has a spirit—the soul within. What though the body lives, if his soul be dead! The problem of life will be solved if a living soul inhabits a living body. How to build the life of the soul? Even here, there is an All soul which fills the entire cosmos. It is

God. He is all-pervading. He fills the entirety of creation. In this condition He is said to be immanent. To make him manifest is a great work. In His immanent condition, He is not perceivable to the senses. If you can make him manifest, you can see Him in His play. The Lord at play is Sri Nataraja. The Lord in repose or the immanent God is Sri Padmanabha, Ranganatha or Narayana lying on the bed of Sri Audisesha. Through breath again you can rouse him to action. For He is within you. Weave your breath around His thought. Thereby a dead soul is converted into a living soul.

The constant breath makes the continuous life of the body. Even so the constant thought of the Lord within, makes for you the living soul.

The might of breath is illustrated in the pneumatic tyres which sustain untold weightage in the modern industrial civilisation. What is breath for the body, that is thought for the soul. With the constant thought of the Lord, you can sustain the weight of the cosmos. Give the breath to the Lord by singing His great name. Give the meditative thought to Him and put life into the soul. He who can combine both will be blessed with a living body and a living soul, each sustaining the other. Sing heartily. Live soulfully-Breathe and Build.

—*Thiruppugal Mani.*

259

அன்ன லேஉன் னடியவர் போலருட்
கண்ணி னாலுனைக் காணவும் வாவெனப்
பண்ணி னாலென் பசுத்துவம் போய்உடும்
வண்ண மாக மனோலயம் வாய்க்குமே.

(தாயுமான சுவாமிகள்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்
புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd :—1924 Phone :—113

N. K. M.
தங்கநாடா

நம நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St, Madras.